ஓம் சக்தி

ஓம் விராட் விஸ்வப் ப்ரம்மனே நம:

# மட்டக்களப்பு கோட்டைமுனை

# புன்னையம்பதி அருள்மிகு ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்

## புனராவர்த்தன சம்புரோக்ஷன மகாகும்பாபிஷேகம் 28-01-2007

# ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலய சங்க பவளவிழா

## 1929 - 2007



# சிறப்பு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மட்டக்களப்பு

கோட்டைமுனை – புன்னையம்பதி

# அருள்மிகு ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய புனராவர்த்தன சம்புரோக்ஷன மகா கும்பாபிஷேகம்

28 – 01– 2007

ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய சங்க பவளவிழா

1929 – 2007

# சிறப்பு மலர்



வெளியீடு:

ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய சங்கமும் கும்பாபிஷேகக் குழுவும்

கோட்டைமுனை – மட்டக்களப்பு

31 - 03 - 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

"சிவமெனும் பொருளும் ஆதி சக்தியோடு
சேரின் எத்தொழிலும் வல்லதாம்."
அவள் இன்றேல் இயக்கம் இல்லை.
மனிதரும், தேவரும், மாயாமுனிவரும் வழுத்தும் சேவடிகளை
நாம் பணிந்து, புகழ்ந்து, பரவ என்ன புண்ணியம் செய்தோமோ?

கோட்டைமுனை புன்னயம்பதி
அருள்மிகு ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய,
மூன்றாவது புனராவர்த்தன மகா கும்பாபிஷேக,
வாசமிகு மென்மலரை, நவபெரும் புவனம், எவ்வகைத் தொழில்,
நடாத்தி, புன்னையம்பதியில் கோயில் கொண்டு, அருளாட்சி செய்கின்ற,
அன்னையாம் ஆதி பராசக்தியின் அம்சமாம்,
ஸ்ரீ மகா மாரியம்பாளின் வற்றாதருள் சுரக்கும் பொற்றாமரைப்
பாதங்களில் சமர்ப்பித்து, அருள் வேண்டி,
அமைகின்றோம்.

- கும்பாபிஷேகக் குழுவினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு – கோட்டைமுனை
# ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்

## இனிதே நடந்தேறிய
## புனராவர்த்தன மகா கும்பாபிஷேகங்கள்

1) சித்தார்த்தி வருஷம் 1979 நவம்பர் மாதம் 30ம் திகதி (கார்த்திகை 14) தனுலக்கினமும் ரோகினி நட்சத்திரமும் கூடிய காலை மணி 7.30 தொடக்கம் 9.24 வரையிலான சுபமுகூர்த்தம்.
பிரதிஷ்டா குரு :
வியாகரண சிரோமணி ப்ரம்மஸ்ரீ பூரண தியாகராஜக் குருக்கள் B.A (Hons)

2) ஸ்ரீமுக வருஷம் 1993 நவம்பர் மாதம் 19ம் திகதி (கார்த்திகை 04) தனுலக்கினமும் உத்தராட நட்சத்திரமும், ஷஷ்டி திதியும், சித்தயோகமும் கூடிய காலை மணி 8.12 தொடக்கம் 9.56 வரையிலான சுபமுகூர்த்தம்.
பிரதிஷ்டா குரு : பிரதிஷ்டா சிரோமணி, வேதாகம கிரியா சூடாமணி, சுவானுபூதி கிரியா கிரமஜோதி ப்ரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள்.

3) விய வருஷம் 2007 ஜனவரி மாதம் 28ம் திகதி (தை 14) மீனலக்கினமும் ரோகினி நட்சத்திரமும், தசமி திதியும், சித்த யோகமும் கூடிய முற்பகல் மணி 9.35 தொடக்கம் 10.38 வரையிலான சுபமுகூர்த்தம்.
பிரதிஷ்டா குரு : கிரியா கிரம வித்தியா ஜோதி, குமரகுருமணி ப்ரம்மஸ்ரீ. முத்து சற்குருநாதக் குருக்கள்
பிரதம குரு ஆதிகோண நாதர் கோயில் தம்பலகாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

## கோட்டைமுனை – ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்
## புனராவர்த்தன மகா கும்பாபிஷேக

# சிறப்பு மலர்

**ஆசிரியர் குழு:**

திரு. ஏ. பாக்கியமூர்த்தி (J.P., ஓய்வுபெற்ற அதிபர்)

திரு. த. ஈஸ்வரராஜா (மாவட்ட இ.சே.அ)

திரு. த. கருணாகரன் (சியாமளா ஜுவலர்ஸ்)

திரு. ப. குமரகுருபரன் (B.Com Dip - in Edu ஆசிரியர்)

திரு. பூ. லோகானந்ததாசன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

திரு. ந. ஜீவகுமார் (J.P., முகாமைத்துவ உதவியாளர்)

**மலர் தயாரிப்பு:**

கும்பாபிஷேகக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

கோட்டைமுனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு சிறப்பு மலர் ஒன்றினை வெளியிடயிருப்பதையிட்டு மிக மகிழ்ச்சி. இறைநம்பிக்கையும், அதன் அடிப்படையில் செய்யப்படும் இறைவழிபாடும் காலங்காலமாக மனித குலத்தை நல்வழிப்படுத்தி வந்திருப்பதை சரித்திரம் விளக்கமாகக் கூறுகிறது. மனிதன் ஆறறிவு படைத்திருப்பினும், அதன் துணைக்கொண்டு வாழ்க்கை வசதிகளை பலவாறாகப் பெருக்கியிருப்பினும், வாழ்க்கையில் இக்கட்டான நிலையைச் சந்திக்கும்போது தனது இயலாமையை உணர்ந்து இறைவனது துணையை நாடவேண்டிய நிலையில் அவன் உள்ளதைக் காண்கிறோம். இந்த நிர்க்கதியான நிலையில் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்திருக்கும் இறைவனோடு சுலபமாகத் தொடர்பு கொள்வதற்கு உதவும் இடமே ஆலயம்.

நமது சமயத்தில் தோன்றிய எண்ணற்ற ஞானிகள், ஆலயம் தோறும் சென்று அங்கு வதியும் இறைவனை வழிபட்டு அவனது திருவருளைப் பெற்ற அற்புத வரலாறு சரித்திர உண்மையாகும்.

வழிபாட்டின் அடிப்படையாக விளங்குவது புறத்தூய்மையும், அகத்தூய்மையுமே ஆகும். இத்தூய்மையின் அடிப்படையில் மட்டுமே இறையருளைப்பெற முடியும்.

எனவே நம் முன்னோர்கள் தாபித்த ஆலயங்களைக் காத்தும் வளர்த்தும் தூய்மையின் அடிப்படையில் இறைவழிபாட்டில் ஈடுபட்டும் இறையருள் பெறுவோமாக.

கோட்டைமுனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேக சிறப்புமலர் வெளியீட்டு நிகழ்வுகள் சிறப்புற நடந்தேற உலக அன்னையாம் ஸ்ரீ முத்துமாரியம்மனைப் பிரார்த்திப்போமாக.

இறைபணியில்,

சுவாமி அஜராத்மானந்தா

(சுவாமி அஜராத்மானந்தா)

**RAMAKRISHNA MISSION** (Ceylon Branch)
**ASHRAMA & CHILDREN'S HOMES,**
Ramakrishnapuram,
Batticaloa,
Sri Lanka.
065-2222752



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரியாகிரம வித்தியாஜோதி, குமரகுருமணி ப்ரம்மஸ்ரீ முத்து சற்குருநாதக் குருக்கள்

(பிரதம சிவாச்சாரியார், கோட்டைமுனை ஸ்ரீ மகா மாரியம்மன் வேதஸ்தானம்)

அவர்களின்

# ஆசியுரை

அகிலம் அனைத்தும் படைத்தும், காத்தும், அழித்தும், மறைத்தும், அருளும் ஆதிபராசக்தி எங்கும் எதிலும் நிறைந்தும், கடந்தும் இருந்தாலும், தன்னைப் பக்தி சிரத்தையுடன் வழிபடும் அடியார்களுக்கு, திருவருள் புரிவான் வேண்டி, ஆலயங்களை இருப்பிடமாகக் கொண்டு, ஆங்காங்கே எழுந்தரு பசுவின் பால் அதன் முலை மூலமே பெறப்படுகின்றது. அதே போன்று இறையருள்வேண்டி ஆலயங்களை நோக்கி அடியார்கள் செல்வர். இதனாலன்றோ "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்றும் கோயில் இல்லா ஊரில் குடியிருக்காதே" என்றும் "திருக்கோயில் இல்லாத் திருவில் ஊர், ஊரல்ல அடவிகாடே" என்றும் ஆன்றோர் கூறியுள்ளனர்.

அந்த வகையில் மட்டக்களப்பு கோட்டைமுனை புன்னயம்பதி ஓர் புண்ணியம் நிறைந்த புனித சேத்திரமாகும். இப்பழம் பதியிலே அன்னை மகா மாரி வற்றாது அருள் சுரந்து கொண்டேயிருக்கின்றாள். இவ்வாலயத்தின் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்தைப் பொறுப்பேற்று, முன்னின்று நடாத்தும் பெரும்பேற்றை அம்பிகை எனக்குத் தந்தாள். 30-11-2006 அன்று பாலஸ்தாபனம் நடைபெற்றது.

கும்பாபிஷேகக் குழுவினரும், நிருவாக சபையினரும், பொதுமக்களும், எவ்வித சிரமத்தையும் பொருட்படுத்தாது, கருமமே கண்ணாகக் கொண்டு, இரவு பகல் பாராது, ஆலயத் திருப்பணியில் ஈடுபட்டு, குறுகிய காலத்திற்குள், அதாவது 28-01-2007 ஞாயிற்றுக் கிழமை பகல் 9.35 மணி தொடக்கம் 10.30. மணி வரையிலான, ரோகினி நட்சத்திரமும், மீன லக்கினமும், பூர்வபஷ தசமி திதியும், சித்த யோகமும் கூடிய சுபவேளையில், புனராவர்த்தன சம்புரோக்ஷன மகா கும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்தது அன்னையின் திருவருளே. இந்நிகழ்வில் என்னைக் கலந்து கொள்ள வைத்ததும் அத்திருவருளே. என்னே அன்னையின் திருவருள்!

இப்புண்ணிய கைங்கரியங்களிலும் ஆலயத் திருப்பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு அயராது உழைத்து, இக்கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேற உதவிய அனைத்துத் தரப்பினருக்கும், ஸ்ரீ மகா மாரியம்பாளின் நல்லாசியும், திருவருளும் கிடைக்க இரு கரம் கூப்பி ஆதிபரா சக்தியை இறைஞ்சுவதோடு, இலங்கையில் வாழும் அனைத்தின மக்களுக்கும் மிக விரைவில் சாந்தியும் சமாதானமும் நல்வாழ்வும் கிடைக்க அம்பாள் அருள் புரிய வேண்டுமென மனமுருகி வேண்டி அமைகின்றேன்.

**முத்து சற்குரு நாதக் குருக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்வரிசை – இடமிருந்து வலம்: த. கருணாகரன், சு. அருளானந்தம், திருமதி. ஜெ.லோகானந்ததாசன், திருமதி. ப. ஞானமுத்து, பா. குமரகுருபரன், தி. பிரசாத்,
பின்வரிசை – இடமிருந்து வலம்: ந. ஜீவகுமார், கு. கிஷோர், ந. பிரபாகரன், வே. நந்தகுமார், பூ. லோகானந்ததாசன், தி. பிரதீப், த. ஈஸ்வரராஜா, ஏ. பாக்கியமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேக குழு:

திரு. சு. அருளானந்தம் அவர்கள்

திரு. ஏ. பாக்கியமூர்த்தி அவர்கள்

திரு. ந. ஜீவக்குமார் அவர்கள்

திரு. த. கருணாகரன் அவர்கள்

திரு. பூ. லோகானந்ததாசன் அவர்கள்

திரு. த. ஈஸ்வரராஜா அவர்கள்

திரு. பா. குமரகுருபரன் அவர்கள்

திரு. வே. நந்தகுமார் அவர்கள்

திரு. தி. பிரசாத் அவர்கள்

திரு. இ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

திரு. ஈ. லவராஜ் அவர்கள்

திரு. ந. பிரபாகரன் அவர்கள்

திரு. தி. பிரதீப் அவர்கள்

திரு. த. சிவரஞ்கன் அவர்கள்

திருமதி நித்தியாதேவி கோவிந்தசாமி அவர்கள்

திருமதி ஜெயா லோகானந்ததாசன் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டக்களப்பு கோட்டைமுனை ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய சங்கத் தலைவரின்**

# தலைவர் உரை

மட்டக்களப்பு கோட்டைமுனை ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய சங்கமானது 1929ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. சங்கம் கடந்த 77 ஆண்டு காலப்பகுதியில் பலவகையான சோதனைகளைச் சந்தித்ததோடல்லாமல், அவற்றின் மூலம் பல அனுபவங்களைப் பெற்றுக் கொண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓர் சிறந்த ஆலய சங்கமாக வளர்ச்சி கண்டிருப்பது எல்லோருக்கும் நன்கு தெரிந்த ஒன்றாகும்.

ஆலயசங்கம் தனது 78வது ஆண்டு காலச் சேவையைத் தொடங்க காலடி பதித்தபோது, 2007ம் ஆண்டு ஜனவரி மாதம் 28ம் திகதியன்று, ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயத்தின் 3வது புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்தைக் கண்டுகளிக்க அம்பாள் திருவருள் கூட்டியுள்ளமை நாம் பெற்ற பெரும் பேறாகும்.

இச்சந்தர்ப்பத்தில் ஆலய சங்கத்தின் ஸ்திரமான வளர்ச்சிக்கு தமது பங்களிப்பையும், உரிய ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும், உழைப்பையும், அயராது வழங்கிய நமது முனைநாட் தலைவர்கள், செயற்குழுவினர், சங்க அங்கத்தவர்கள் ஆகிய அனைவரையும் இன்று நினைவு கூர்ந்து நன்றிகூற நாம் கடமைப்பட்டுள்ளோம்.

புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் இனிதே நிறைவேற எமக்கு பலவகையிலும் உதவி ஒத்தாசைகளைத் தந்தோர், நிதியுதவி செய்தோர், தக்க ஆலோசனைகளைத் தந்தோர், சிரமதானப் பணிகளில் ஈடுபட்டோர், உடல் உழைப்பை நல்கினோர், தன்னலம் பாராது சமயப் பணியே தன்பணி என்னும் தலைசிறந்த கொள்கையை உடைய பிரதிஷ்டாகுரு. ப்ரம்மஸ்ரீ முத்து சற்குருநாதக் குருக்களும் அவரது உதவியாளர்களும் எனப் பலதரப்பட்டவர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றியை அடக்கத்தோடு கூறிக்கொள்கின்றேன்.

இலங்கை மணித் திருநாட்டில் வாழும் அனைத்தின மக்களும் ஒரு தாய் மக்களாக சாந்தியும் சமாதானத்தோடும் வாழ எல்லாம் வல்ல ஸ்ரீ மகா மாரியம்பிகையைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

- நன்றி - வணக்கம் -

**சுப்பிரமணியம் அருளானந்தம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்வரிசை - இடமிருந்து வலம்: இரா. நித்தியானந்தன், பூ. லோகனந்ததாசன், சு. அருளானந்தம், பா. குமரகுருபரன், த. கருணாகரன், ந. ஜீவகுமார்.
பின்வரிசை - இடமிருந்து வலம்: கி. சிவலிங்கம், ந. பிரபாகரன், ஏ. பாக்கியமூர்த்தி, வே. நந்தகுமார், இ. தேவநாதன், சி. சிவலிங்கம், சா. முருகையா, ஞா. இராமநாதன், த. ஈஸ்வரராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு – கோட்டைமுனை
# ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய சங்கம்

பதிவிலக்கம் 6/3/BT/3/S/31 ஸ்தாபிதம் : 29-12-1929

**நிருவாகசபை:**

| | |
|---|---|
| தலைவர்: | திரு. சு. அருளானந்தம் |
| உபதலைவர்: | திரு. பா. குமரகுருபரன் |
| செயலாளர்: | இ. கிருஷ்ணமூர்த்தி |
| உபசெயலாளர்: | திரு. பூ. லோகானந்ததாசன் (தற்காலிக காரியதரிசி) |
| பொருளாளர்: | ந. ஜீவகுமார் |
| உபபொருளாளர்: | திரு. த. கருணாகரன் |

**பஞ்சகர்த்தாக்கள்:**

திரு. ஏ. பாக்கியமூர்த்தி
சா. முருகையா
எஸ். சாம்பசிவம்
வே. நந்தகுமார்
கி. சிவலிங்கம்

**செயற்குழு:**

திரு. இ. தேவநாதன்
திரு. ஞா. இராமநாதன்
திரு. த. ஈஸ்வரராஜா
திரு. சி. சிவலிங்கம்
திரு. ஈ. லவராஜ்
திரு. ந. சரத்சந்திரா
திரு. இரா. நித்தியானந்தன்
திரு. ச. சற்குணானந்தராசா
திரு. ம. பரந்தாமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு – கோட்டைமுனை
## ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்

# வரலாறும் வழிபாட்டு முறையும்

ஈழத்திருநாட்டில், மட்டக்களப்பு மாவட்டம், சக்தி வழிபாட்டிற்கு மிகவும் பிரசித்தி பெற்ற மாவட்டமாகும். இங்குள்ள கிராமங்கள் தோறும், மாரியம்மன், பேச்சியம்மன், காளியம்மன் போன்ற பல பெயர்களிலும் வடிவங்களிலும் அன்னை பராசக்தி வழிபடப்படுகின்றாள். சக்தி வழிபாடு உரிய பத்தி முறையைப் பின்பற்றி நடைபெற்று வருகின்றது. ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட மாதத்தில் வரும் பூரணை தினத்தை நிறைவு தானாகக் கொண்டு அதற்கு முந்திய ஐந்து அல்லது பத்துநாட்கள் சக்திவிழா நடைபெறும். இவ்விழா திருக்கதவும் திறத்தலோடு ஆரம்பித்து பூரணையில் தீ மிதத்தல், குளிர்த்தியாடல், சக்கரையமுது போன்ற நிகழ்வுகளோடு நிறைவடைந்து, திருக்கதவும் சாத்தப்படும்.

19ம் நூற்றாண்டளவில் கோட்டைமுனைப் புன்னையம்பதியில் ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம் அமைந்துள்ள பகுதி, புன்னை மரங்கள் அடர்ந்து வளர்ந்த ஓர் தோப்பாகக் காணப்பட்டது. அத்தோப்பின் மத்தியில் காணப்பட்ட ஓர் புன்னை மர நிழலில், தினசரி மாலை வேளையில், ஓர் ஒளியுருவம் தோன்றி சிறிது காலம்தரித்திருந்த பின்னர் மறைவதைக் கண்ணூற்ற சுற்றாடலில் வாழ்ந்த விஸ்வப்பிரம்ம கோத்திரத்தைச் சார்ந்த மக்கள் இவ்வதிசய நிகழ்வைக் கண்ணுற்று அம்மரத்தின் அடியில் சிறிய பந்தர் ஒன்று அமைத்து அச்சோதியுருவை மகா மாரியம்பாளாக வழிபட ஆரம்பித்தனர்.

காலப்போக்கில் சிறிய பந்தர், ஓர் பெரிய பந்தராக உருமாறியது. மட்டக்களப்பு மாவட்டத்தின் சக்தி வழிபாட்டு முறைக்கமைவாக ஆனி மாதப் பூரணை தினத்தை நிறைவு நாளாகக் கொண்டு மாரியம்மன் சடங்கு ஆரம்பிக்கப்பட்டது. மாரியம்மன் ஆவாகனம் செய்து வழிபடும் பூரண குடும்பம் வைக்கப்பட்டுள்ளன கருவறையிலே, ஆதிபைரவர் திருவுருவமும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

புன்னை மரத்தின் அருகிலேயே ஓர் வேம்பு வளரத் தொடங்கியது. காலத்தால் புன்னை அழிந்துபோகவே வேம்பு மரம் தலவிருட்சமானது. பத்ததி முறைப்படி வழிபாடு நடைபெற்று வரும் காலத்தில், ஆகம விதிக்கமைவாக அம்பிகையை வழிபாடாற்ற மக்கள் விரும்பினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதுள்ள தலவருட்சமாகிய வேப்பை மரத்தின் கீழ் ஆதிபைரவரை பிரதிஷ்டை செய்து விட்டு மரத்திற்கு தெற்கேயுள்ள பகுதி நிலத்தில், கருவறை மகா மண்டபம், முதலிய மண்டபங்களைக் கொண்ட ஆலயம் ஒன்றை அமைத்தனர். இவ்வாலயம், கபுக் எனப்படும் கற்கள், செங்கற்கள், நீறு முதலானவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தது. ஸ்ரீ மகா மாரியம்பாளின் கல்லாலான திருவுரும் பிரதிஷ்டை செய்யப்பட்டு, தினசரி பூசை ஆரம்பிக்கப்பட்டது.

பத்ததி முறைப்படி நடைபெற்றபோது பயன்படுத்தப்பட்ட சிலம்புகள், அம்மானைக்காய், திரிசூலம் போன்ற பொருட்கள் இன்றும் ஆலயத்தில் வைத்து பேணப்படுகின்றன. பத்ததி முறையை விட்ட ஆலயம் ஆகம முறையைப் பின்பற்றத் தொடங்கியதும் நவராத்திரி, திருவெம்பாவை போன்ற இந்துக்களின் புனித விழாக்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வரலானது. முக்கியமாக சாரதா நவராத்திரியின் போது ஒன்பது நாட்களும் அலங்கார உற்சவமாக நடைபெறுவது பண்டு தொட்டு இன்றுவரை வளமையாகும்.

நவராத்திரி இறுதிநாளான விஜயதசமியன்று மானம்பூ உற்சவம் நடைபெறும். ஆரம்ப காலத்தில் இவ்வுற்சவத்திற்காக அம்பாள் தாமரைக்கேணி ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயத்திற்கு எழுந்தருளி அவ்வாலய முன்றலில் கன்னி வாழை வெட்டு நடைபெற்றது. பின்னா் பயனியார் வீதி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. தற்போது இவ்விழா ஆலய முன்றலிலேயே நடைபெறுகின்றது.

ஆலயத்தையும், அதன் நிருவாகத்தையும் செவ்வனே நடாத்திச் செல்லும் வகையில் 1929ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ம் திகதி கூடிய மகா சபைக் கூட்டத்தில் நம்பிக்கைத் தத்துவகாரர் நியமன சாசனம் அங்கீகரிக்கப்பட்டு, அதன் பிரகாரம் இன்றுவரை ஆலய நிருவாகம் செவ்வனே நடைபெற்று வருகின்றது. இந்த வகையில், கோட்டமுனை ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலய சங்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓர் பழம்பெரும் ஆலயசங்கமாக மிளிர்கின்றது என்றால் அது மிகையாகாது.

ஆலய சங்கமானது தனது 78 ஆண்டு காலப் பகுதியில், சைவ சமயத்திற்கும் சமுகத்திற்கும் அளப்பரிய சேவைகளை ஆற்றி வந்திருக்கின்றது. இன்று காணப்படும் ஆகம விதிப்படி அமைந்த ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் 1968ம் ஆண்டு மார்ச் மாதம் 15ம் திகதி நடைபெற்று பலதரப்பட்ட பின்னடைவுகளையும் மீறி நிர்மாணக்கப்பட்டு 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் திகதி நடைபெற்ற புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்துடன் நிறைவுற்றது. தொடர்ந்து நவக்கிரகம், ஆஸ்தான பைரவர் நாகதம்பிரான், சண்டேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகியவற்றிற்கான பரிவார ஆலயங்களும் வசந்த மண்டபம், சுற்று மண்டபம், துவஜத்தம்பம் என்பனவும் அமைக்கப்பட்டு இன்று ஓர் சிறந்த சக்தி தேவஸ்தானமாக வளர்ச்சியடைந்திருப்பது, இவ்வாலயத்தில் கோயில் கொண்டருளும் அன்னை ஸ்ரீ மகா மாரியின் திருவருட் கடாட்சமேயாகும்.

பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தை தீர்த்தோற்சவமாக் கொண்டு 10த் தினங்கள் மஹோற்சவம் இரதோற்சவம் என்பன நடைபெற்று வருகின்றன.

## புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம்

2007ம் ஆண்டு ஜனவரி மாதம் 28ம் திகதி இனிதே நடந்தேறிய 3வத புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் அம்பாளின் திருவருட்காட்சத்தை மேலும் எடுத்து இயம்பக் கூடிய ஓர் சான்றாகும். கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்பது எல்லோருடையதுமான பேரவா. ஆனால் பணத்திற்கு எங்கே செல்வது என்பது சிலருடைய அங்கலாய்ப்பு. அவளன்றி ஓர் அணுவும் அசையாது. அவள் நினைத்தால் முடியாதது எது. என்பது கும்பாபிஷேகக் குழுவிலுள்ள சிலரின் துணிவு. "நம்பினார் கெடுவதில்லை. நான்கு மறை தீர்ப்பு - அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்" என்னும் பாரதியின் சத்திய வாக்கிற்கிணங்க, நம்பினோம். சரணடைந்தோம். செயற்படத் தொடங்கினோம்.

சிறந்த சிவாச்சாரியாரைத் தேடி அலையாமல் அவளோ, உகந்த ஒருவரைத் தந்துதவினாள். 30-11-2006 அன்று பாலஸ்தாபனம் நடந்தேறியது. அடியார்கள் பெருமனதோடு தம்மால் இயன்ற நிதியை வாரி வழங்கினார்கள். ஆலயத் திருத்த வேலைகள், வர்ணம் தீட்டுதல், தேவையானயாக திரவியங்களைக் கொள்வனவு செய்தல் போன்ற பல தரப்பட்ட புண்ணிய கைங்காரியங்களில் அடியார்கள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு இரவுபகல் பாராது அயராது உழைத்தனர்.

பாலாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்ட அன்னையின் திருவுருவை, அவளது சிம்மாசனத்தில் உரிய முறைப்படி ஏற்றிவைத்துவிட வேண்டும் என்னும் மன உந்துதல் எல்லோரிடமும் இருந்தது. பாலஸ்தாபனம் செய்து இரண்டு மாதங்களில் அதாவது 28-01-2007 அன்று, புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்தை, ப்ரம்ம ஸ்ரீ முத்து சற்குரு நாதக் குருக்கள் மூலம் நிறைவேற்றி வைத்தாள் பராசக்தி.

ஸ்ரீ மகா மாரியம்பிதையைக் கர்த்தாவாகக் கொண்டு நம்மை எல்லாம் கருவிகளாக பாவனை செய்ததால், குறுகிய காலத்திலேயே கும்பாபிஷேகம் சிறப்பாக நிறைவேறியது. அம்பிகையின் சாந்தித்தியம் வற்றாத சுனையாக, புன்னையம் பதி என்னும் இப்புண்ணிய சேத்திரத்தில் பாய்ந்து கொண்டு இருக்கிறது என்பதற்கு இதை விடச் சான்றும் வேண்டுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தல விருட்சம்

ஆலயத்தின் தல விருட்சமாக இருந்த புன்னை மரம் காலத்தால் அழிந்துபோகவே அப்புன்னை மரத்தின் அருகில் தானாகவே தோன்றி வளர்ந்த வேம்பு, போதிய பாதுகாப்பின்மையாலும், பொதுமக்களின் அக்கறையின்மையாலும், அதன் பட்டையை மருத்துவ தேவைக்காக வெட்டுவதாலும், அம்மரம் அழிந்து விடுமோ என்று ஐயம் கொண்ட போது; "அஞ்சேல்; நான் இருக்கிறேன்" என்று அம்பாள் கூறுவது போல், வேம்பை மையமாகக் கொண்டு, தெற்கே ஆலமரமொன்றும் வடக்கே அரசமரம் ஒன்றும் சுயம்பாக வளர ஆரம்பித்தன.

ஆலமரத்தை விஷ்ணுவின் அம்சமாகவும், வேப்பை மரத்தை சக்தியின் அம்சமாகவும், அரச மரத்தை சிவம்சமாகவும் கொள்வது மரபு. துர்அதிஷ்டவசமாக, சுற்று மண்டபம் அமைக்கும் போது, தகுந்த ஆலோசனையின்றி ஆலமரத்தை வெட்டி அகற்றிவிட்டது. தலவிருட்சத்திற்கும், அடியார்களுக்கும் பெரும் குறையாகவே காணப்படுகின்றது.

இன்று வேம்பும் அரசுமே செழித்தோங்கி நிற்கின்றன. ஸ்ரீ மகா மாரியம்பாள் வேம்பின் நிழலில் கோயில் கொண்டு தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றாள் என்பது ஐதீகம்.

சிவாம்சமாகக் கருதப்படும் அரச மரத்தின் மருத்துவ குணங்களை சித்தர்கள் கூறியுள்ளனர். இம்மரத்தை வட மொழியில் "அஷய வடம்" என்பர். மேலும் அரசமரத்தை மும்மூர்த்திகளின் வடிவதாகவும் வணங்குவர். அரச மரத்திற்கு "திரு மரம்" என்றோர் பெயர் உண்டு. குழந்தைப்பேறு வேண்டியும், கர்ப்பக் கோளாறுகள் நீங்கவும், இரைப்பை, குடல் நோய்கள் தீரவும், அரசம் தளிர், விதைகள், பட்டை, வேர் என்பவற்றை ஆயுர்வேதம் பயன்படுத்தி வெற்றி கண்டிருக்கிறது. மேலும், அரசமரம் ஈர்த்து வெளிவிடும் காற்றைச் சுவாசிப்பதனால் பல நோய்கள் தீர்ந்து விடுகின்றன.

ஆகவே தெய்வாம்சமும் மருத்துவகுணமும் கொண்ட அரசு, வேம்பு, ஆல் ஆகிய முப்பெரும் விருட்சமே, இந்த திவ்விய சேத்திரத்தின் தலவிருட்சமாகும். இப் பெரு மரத்திற்கு நீர் வார்ப்பதால், சுற்றி வலம் வருவதால் பாதுகாப்பதால் நாம் பெரும் பயனை அடையலாம் என்பது கண்கூடு.

வெளியூருக்கு பயணம் போகும் போதோ நீதிமன்று செல்லும் போதோ, தூயமனதோடு ஸ்ரீ மகா மாரியம்பாளை வணங்கி, உட்பிரகாரத்தை வலம் வந்து தலவிருட்சத்தின் அடியில் வீற்றிருக்கும் ஆதி பைரவை பலமுறை பிராத்தித்து மூவகை இலைகளைத் தம்மோடு எடுத்துச் சென்றால் செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியம், எவ்வித தடைகளும் இன்றி வெற்றியளிக்கும் என்பது அனுபவபூர்வ உண்மை.

மரங்களை வளர்க்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை தொடக்கம் உலகிலுள்ள பல அரசாங்கங்கலும் கூறும் போது, மரத்தை அழித்தல் எவ்வளவு மடைமையானது என்பதை உணர்ந்து, இவ்வாலயத்தின் தல விருட்சத்தைப் பேணிக் காப்பது நமது தலையாய கடமையல்லவா.

## நந்தி அல்லது ரிஷபம்

இவ்வாலயத்தின் மற்றோர் சிறப்பு அம்சம் சிம்மத்திற்குப் பதிலாக நந்தி பிரதிஷ்டை செய்துள்ளமை. ஸ்ரீ மகா மாரியம்பாளின் வாகனம் சிங்கம் என்பது எல்லோரும் அறிவர். ஆனால் நந்தி பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. நந்தி வாகினியாக வரும் மகா மாரியை "சிவநாயகி" என்னும் திருப்பெயரால் ஆன்றோர் அழைப்பர். ஸ்ரீ மகா மாரியம்பாளே, நந்திவாகினியாக சிவ நாயகியாகிய கோயில் கொண்டு அருள் பாலிக்கின்றாள். என்பது புலனாகின்றது. மகா மாரியும் அவளே. காமாட்சியும் அவளே.

## இராஜ கோபுரம்

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்பது ஆன்றோர் வாக்கு. ஆலயத்திற்கு இராஜகோபுரம் அமைக்கும் திருப்பணியில் ஆலய விஸ்வகுல வாலிபச் சங்கம் அயராது தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றது. சித்திரத்தேரினை செவ்வனே அமைத்து அதில் அம்பாள் ஆரோகணித்து வரும் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு களிக்க எமக்கு உதவிய அச்சங்கம் கூடிய விரைவில் இராஜகோபுரத்தையும், அதன் அழகையும் நாம் கண்டு களிக்க எல்லாம் வல்ல மகா மாரியம்பாள் திருவருள் புரிய, இருகரம் கூப்பி மனதால், வாக்கால் உடலால் இறைஞ்சுவோமாக. அவள் "செய்வம் என்றோர் செய்கை எடுப்பவர் தெய்வம்" இம்முறை கும்பாபிஷேகத்தின்போது மேரு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

எமது முன்னோர்களால் ஊன்றப்பட்ட ஓர் சிறியவிதை இன்று ஆல்போல் தழைத்து பெருவிருட்டமாக நிற்கின்றதென்றால், அந்தப் பெருமையும் புகழும் ஸ்ரீ மகா மாரியம்பாளையே சேரும். அவளருளால் அவள் தாள் வணங்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய புனராவர்த்தன கும்பாபிஷேகத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள் 28 - 01 - 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு – கோட்டைமுனை
## ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்

### நித்திய நைமித்திய பூசைகள்

தினசரி மூன்று காலப்பூசைகள் : காலை 7.00 மணி
நண்பகல் 12.00 மணி
மாலை 5.30 மணி

**மாதாந்தம் நடைபெறும் விஷேட பூசைகள் திருவிழா என்பன**

**1] தைமாதம் -** தைப்பொங்கல் (மகர சங்கராந்தி)
தைப்பூசம் பூரணை
மணவாளக் கோலம் தைமாதம் ரோகினி நட்சத்திரம்

**2] மாசி மாதம் -** மாசிமகம் பூரணை
மகா சிவராத்திரி நான்கு சாம பூசைகள்
பூர்வ சதுர்த்தசி - நடேசர் அபிஷேகம்

**3] பங்குனி மாதம் -** மஹோற்சவம் 10 நாட்கள்
இரதோற்சவம்
உத்தரம் தீர்த்தம்
பூரணை

**4] சித்திரை மாதம் -** புதுவருடப் பிறப்பு
சித்திரைச் சித்திரை
பூரணை சித்திரகுப்த விரதம்
திருவோணம் நடேசர் அபிஷேகம்

**5] வைகாசி மாதம் -** பூரணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) **ஆனி மாதம் -** ஆனி உத்தரம் நடேசர் அபிஷேகம்
பூரணை

7) **ஆடி மாதம் -** ஆடிப் பூரம்
வரலஷமி விரதம்
பூரணை

8) **ஆவணி மாதம் -** பூர்வசதுர்த்தசி நடேசர் அபிஷேகம்
பூரணை
ஆவணி திருவோணம்
ஆவணி விநாயகர் சதுர்த்தி

9) **புரட்டாதி மாதம் -** நவராத்திரி விரதம்
(10 நாட்கள் அலங்கார உற்சவம்)
பூர்வ சதுர்த்தசி - நடேசர் அபிஷேகம்
பூரணை
கேதார கௌரி விரதாரம்பம்

10) **ஐப்பசி மாதம் -** கேதார கௌரி விரதம்
தீபாவளி
ஸ்கந்தஷஷ்டி விரதம்
ஐப்பசி பரணி
பூரணை

11) **கார்த்திகை மாதம் -** பூரணை சர்வாலய தீபம்

12) **மார்கழி மாதம் -** விநாயக ஷஷ்டி
திருவெம்பாவை
திருவாதிரை நடேசர் அபிஷேகம்

**குறிப்பு:**

பூரணை தினங்களில் அம்பாளுக்கு அலங்காரத் திருவிழாக்கள் நடைபெறும். வெள்ளிக்கிழமை தோறும் விஷேட அபிஷேகம் பூசை என்பன நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய அறநெறி பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவம்

"சைவசித்தாந்த சிரோமணி", "ஜன சேவா"
திரு. ஏரம்பமூர்த்தி பாக்கியமூர்த்தி. ச. நீ.
(ஓய்வு பெற்ற அதிபர்)

(இக்கட்டுரை மட்/ கோட்டமுனை "புன்னையம்பதி" ஸ்ரீ மகா மாரியம்மன் திருக்கோயிலை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. மட்/ சிவானந்த வித்தியாலய முந்நாள் சமஸ்கிருத, இந்து நாகரிக விரிவுரையாளரும், அண்ணாமலைப் பல்கலைக்கழக வியாகரண சிரோமணியுமான ப்ரம்மஸ்ரீ பூரண. தியாகராஜ குருக்கள். B.A (HONS) அவர்களது அறிவுரையின் பேரிலும், வழிகாட்டலின் பேரிலும் எழுதப்பட்டது. மேலும் 1979-11-30 அன்று நடைபெற்ற இத்திருக்கோயிலின் முதலாவது புனராவர்த்தன மஹா கும்பாபிஷேக நிகழ்வைத் தலைமை தாங்கி சிறப்பாக நடாத்தித் தந்தவர் என்பது குறிப்பிடதக்கது.)

மஹோற்சவம் என்பது மேலானதும் உயர்வானதுமான படைத்தல் முதலிய பஞ்சகிருத்தியங்களைக் குறித்து நிற்கும். மேலும், இறைவன் ஐந்தொழில்களால் ஆன்மாக்களது மும்மலபந்தத்தை நீக்கி, ஞானத்தைக் கொடுத்து மேலான வீட்டின்பத்தை நல்குவதை மஹோற்சவம் குறித்து நிற்கும் என்பர்.

உத்+ஸவம் = உத்ஸவம் "உத்" என்பது மேலான ஞானத்தையும், "ஸவம்" என்பது போகம் மோட்சம் என்னும் பொருள்படுவதால், மஹோற்சவம் என்பது மேலான ஞானம், போகம், மோட்சம் என்பனவற்றைத் தரவல்லது என்று பொருள் கொள்வர்.

மூலஸ்தான விமானம் அல்லது தூபி உள்ள திருக்கோவில் களிலேயே மஹோற்சவம் செய்யப்படவேண்டும் எனப் பெரியோர் கூறுவர்.

## மஹோற்சவம் செய்யப்படவேண்டியதன் அவசியம்

சைவத் திருக்கோவில்களில், நித்தியம் - நித்தியாங்கம் நைமித்திகம் - நைமித்தியாங்கம், காமியம் - காமியாங்கம் என பலதரப்பட்ட பூசைகள் திருவிழாக்கள் என்பன நடைபெறுகின்றன

இவ்வாறு நடைபெறும் பூசைகள் திருவிழாக்கள் என்பனவற்றின் போது, பிரயோகிக்கும் மந்திரங்கள் கிரியைகள், பாவனைகள் என்பனவற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் குறைகள் குற்றங்கள் முதலியவற்றிற்கும்; திருக்கோயில் வழிபாட்டிற்காக வரும் அடியார்கள் செய்யும் உடற் குற்றங்கள், சிந்தனைக் குற்றங்கள் தகாத வார்த்தைகளைப் பேசுவதால் ஏற்படும் குற்றங்கள், போன்ற பல்வகையான குற்றங்குறைகளுக்கு பிராயச்சித்தம் தேடு முகமாகவே மஹோற்சவம் செய்யப்படுகின்றது. மேலும் இலங்கையிலுள்ள சைவத் திருக்கோவில்களில், சிவாகம வழிமுறைகளைப் பின் பற்றியே மஹோற்சவம் செய்யப்படுகின்றது.

## மஹோற்சவம் செய்வதற்கு இன்றியமையாதவை

மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி கொடியிறக்கத்துடன் நிறைவெய்தும். மஹோற்சவம் செய்யும் காலத்தை திருக்கோயில் அறங்காவலர்கள் ஏற்கனவே தீர்மானம் செய்திருப்பர்

## காலம்

ஒருவருடத்தின் முதல் ஆறு மாதங்களும் உத்தராயன புண்ணிய காலமாகும். இக்காலம் தேவர்கட்குப் பகற் பொழுதாகும். பின்னர் வருகின்ற ஆறுமாதங்களும் தட்சணாயன புண்ணிய காலமாகும். இக்காலம் தேவர்கட்கு இராப் பொழுதாகும். இதில் வரும் மார்கழிமாதம் வைகறைப் பொழுதாகும். பூரணை, அமாவாசை முதலிய திதிகளைக் கருத்திற் கொண்டும், நட்சத்திரங்களைக் கொண்டும், எந்த மாதம் என்ன திதி நட்சத்திரத்தில் தீர்த்தோட்சவத்தை நடாத்துவது எனக் கணக்கிட்டு அதற்கு முந்தய ஒன்பது தினங்களோ அல்லது பதின்நான்கு தினங்களோ திருவிழா நடைபெறக்கூடியவாறு மஹோற்சவ காலம் தீர்மானிக்கப்படும்.

கோட்டைமுனை ஸ்ரீ மகா மாரியம்மன் திருக்கோயிலில் நடைபெறும் மஹோற்சவம் பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறக் கூடியவாறு, ஒன்பது நாட்கள் திருவிழாவும், பத்தாம் நாள் உத்தர நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவத்தோடு நிறைவேறக் கூடியவாறு நடைபெற்று வருகின்றது.

## கொடிமரம் அல்லது துவஜத் தம்பம்

இது சந்தனம், கருங்காலி, வில்வம், சம்பகம், ராஜாலம், அசோகம், மருது, மகிழ், வேம்பு, தேவதாரு, அத்தி, கோங்கு, தேக்கு, நாகம் முதலிய மரங்களைக் கொண்டும்; பாலுள்ள வேறு மரங்களைக் கொண்டும் உருவாக்கப்படலாம்.

கொடி மரத்தின் உயரம் கருவறை விமானத்தின் கலச மட்டமாக இருப்பது உத்தம். எனினும் இடவசதிக் கேற்ப வியாழ மட்டம், காற்பிரவாய் என்னும் அளவுப்படியும் கொடிமரத்தின் உயரம் கணக்கிடப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடி மரத்தின் மொத்த நீளத்தை ஐந்து பங்காக வகுக்க வேண்டும். அதில் 1/5 பங்கை சதுர வடிவாக அமைத்து, பூமிக்கு அடியில் நடத்தவேண்டும். இது ப்ரம்ம பாகம் எனப்படும். அடுத்துள்ள 1/5 பாகத்தை எண்கோண வடிவில் அமைக்க வேண்டும். இது பீடத்தினுள் வைக்கப்பட வேண்டும். இது விஷ்ணு பாகம் எனப்படும். எஞ்சியுள்ள 3/5 பாகத்தை வட்ட வடிவமான உருளை வடிவாக அமைக்க வேண்டும். இது பீடத்தின் மேலே நீண்டு நிற்கும் ருத்ர பாகமாகும்.

ருத்ர பாகத்தின் உச்சியில் மூலஸ்தான விமானத்தை நோக்கியவாறு மூன்று யஷ்டிப் பலகைகள் சமமான இடைவெளி-யுடையதாகப் பொருத்தப்படும். இப் பலகைகளில் சிறிய மணிகள் பொருத்தப்பட்டிருக்கும். இப் பலகைக்கு மேல், திருக்கோவிலில் கோயில் கொண்டு அருளுகின்ற மூர்த்தி எவரோ, அவரது வாகனத்தின் சிறிய உருவகம் ஒன்றும் வைக்கப்படும்.

கொடி மரத்தைப் பின்வரும் ஒழுங்குப் பிரகாரம் வைக்க வேண்டும் எனக் கூறுவர். தம்ப மண்டபத்தில், நந்தி (அல்லது மூலவரின் வாகனம்) பலிபீடம், கொடிமரம் என்ற ஒழுங்கில் வைப்பதே ஆகம ரீதியானது. திருக்கோயிலுள்ள மூலவர் பதியைக் குறிப்பதாகும். நந்தி பசுவாகும். பசுவாகிய, உயிர் பதியாகிய இறைவனை நோக்கியவாறே இருக்க வேண்டும். பலிபீடம் பாசத்தை அதாவது மலத்தைக் குறிப்பதாகும். கொடிமரம் சூக்கும லிங்கம் எனப்படும்.

## கொடிச் சீலை

கொடிச் சீலை வெண்மையாகவும், கொடிமரத்தின் உயரத்தின் இரண்டு மடங்கு நீளம் கொண்டதாகவும் இருக்க வேண்டும். சீலையை ஒன்பது பாகங்களாக வகுத்து, அதன் தலைப்பில் வரும் 1/9 பாகத்தை விடுத்து, அடுத்துவரும் 1/9 பாகத்தில் சித்திரம் வரைதல் வேண்டும். கொடிச் சீலையின் தலைப்பில் விடப்பட்ட பாகத்தைக் கொண்டு கூர்ச்சத்தோடு கூடிய ஓர் முடிச்சு முடிவர். இது ப்ரம்மக் கிரந்தி எனப்படும்.

## கொடிச் சீலையில் வரையப்படும் சித்திரங்கள்

மூலவர் எவரோ அவரது வாகனம் பூரண கும்பம், சங்கு, பேரி, தீபம், சூரியசந்திரா, திருவாசி, அஸ்திரதேவர், மணி, குடை, கண்ணாடி, தீபம், இரட்டைச் சாமரை ஸ்ரீவத்சம், சுவஸ்திகா என்பன கொடிச் சீலையில் ப்ரம்மக் கிரந்திக்கு அடுத்து வரும் பகுதியில் வரையப்படும். இதனைக் கொடி எழுதுதல் என்பர். கொடி வரைதலை விஸ்வப் ப்ரம்ம கோத்திரத்தைச் சேர்ந்த ஒரவரே எழுத வேண்டும். (ஆசாரி கல்வெட்டைப் பார்க்கவும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸ்திர தேவர்

மூலவர் எவரோ அவரது பிரதானமான ஆயுதம் அஸ்திரதேவர் எனப்படுவார். மஹோற்சவ காலத்தில் அஸ்திரதேவர் மூலரின் பிரதிநிதியாகக் கருதப்படுவார்.

## யாகசாலை

திருக்கோவில்களில் மஹோற்சவம் செய்வதற்கு யாசகசாலை இன்றியமையாததாகும். இது உட்பிரகாரத்தில் வடகிழக்கில் அதாவது ஈசான மூலையில் அமைக்கப்பட்டிருப்பது வழமையாகும்.

இங்கு மஹோற்சவம் ஆரம்பமாகி நிறைவடையும் வரை, பிரதான கும்பங்கள் ஒன்பதும் ஏனைய கும்பங்களும் ஸ்தாபனம் செய்யப்பட்டு, அக்னி காரியம் நடைபெறும். தினசரி இரண்டு வேளை ஓமம் செய்யப்படுவதாலும், விசேட பூசை நடைபெறுவதாலும் யாகசாலை எங்கும் சாந்தியாதீத கலா சொருபம் என்பர்.

பூர்வாங்கக் கிரியைகளில் ஒன்றான மிருத்சங்கிரண (மண் எடுத்தல்) த்தின் போது எடுக்கப்பட்ட மண், இங்கு பன்னிரு ஆதித்தியர்களைக் குறிக்குமுகமாக சந்திர கும்பத்தைச் சுற்றி பாலிகையிடுவதற்காகப் பயன்படுத்தப்படும்.

## மஹோற்சவ சிவாச்சாரியார்

போதிய அனுவமும், சிவாகம கிரியை முறை தெரிந்தவரும், திரிகரண சுத்தியுடையவரும், ஆச்சாரிய அபிஷேகம் பெற்றவரும், கிரியைகள் செய்வதன் நோக்கத்தையும், அதனால் வரும் பயனையும் பற்றி நன்கு அறிந்தவரும், ஒழுக்கசீலரும் போதிய கல்வியறிவு உள்ளவருமான. குடும்பஸ்தர் ஒருவரை மஹோற்சவ குருவாக அமர்த்துதல் சாலச் சிறந்தது. சர்வ போத சாதகர், அவருக்கு உதவியாக இருந்து வழிநடாத்த வேண்டும்.

## பூர்வாங்கக் கிரியைகள்

மஹோற்சவம் ஆரம்பமாவதற்கு முந்தையதினம் அனுக்ஞை, கிராம சாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரணம், அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், கொடி எழுதுதல் போன்ற பூர்வாங்கக் கிரியைகள் நடைபெறும்.

இராட்சாபந்தனத்தின் போது அஸ்திரதேவர், கட்டியப் பொல்லு, உட்பட எல்லாத் தெய்வத் திருவுருவங்களுக்கும் காப்புக் கட்டுதல் இடம் பெறும். மஹோற்சவ சிவாச்சாரியார், தனக்கு எவ்விதமான துன்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்தாலும், மஹோற்சவத்தைத் தடையின்றி, தொடக்கம் முதல் நிறைவு வரை திரிகரண சுத்தியோடு உரிய முறைப்படி நடாத்தி முடிப்பேன் எனச் சங்கர்ப்பம் செய்து தனது வலக்கையில் கட்டிக் கொள்வார்.

## கொடியேற்றம் - துவஜாரோகணம்

மஹோற்சவ ஆரம்பத்தினத்தன்று காலை, திருக்கோயிலின் மூலவருக்கு விசேட அபிசேகம் பூசை என்பன நடைபெறும். அஸ்திரதேவரை ஆவாகனம் செய்து கொடிச்சீலைக்கு அதற்குரிய ஹோமம், பூசை என்பன நடைபெறும். ப்ரம்மக் கிரந்தியோடு தர்ப்பைக் கயிறு சேர்க்கப்படும்.

வசந்த மண்டபத்தில், உற்சவ மூர்த்திக்கு விசேட தீபாராதனை பூசை என்பன நடைபெறும். கொடியேற்றத்திற்கு உற்சவ மூர்த்தி எழுந்தருளும் போது, எதிர்பாராத தடைகளை நீக்கி, எடுத்தகாரியம் இனிதே நிறைவேற, உற்சவ மூர்த்தியோடு ஒரு சிறிய பிள்ளையாரின் திருவுருவத்தை உடன் வைப்பது நன்மையளிக்கும்.

வசந்த மண்டபத்தில் இருந்து, உற்சவமூர்த்தியை எழுந்து அருளச் செய்து, கொடித் தம்பத்தை வலமாக வந்து, வடக்குநோக்கி தரிக்கச் செய்வர். (இது கிழக்கு வாயில் திருக்கோயிலுக்கு பொருந்தும்) அல்லது உரிய வாகனத்தில் எழுந்தருளச் செய்வர்.

விஷேட ஹோமம், மந்திரம் என்பனவற்றால் பூசிக்கப்பட்ட கொடிச் சீலையையும், அஸ்திரதேவரையும் கொடித் தம்பத்தின் அருகே எழுந்தருளச் செய்வர். கொடித் தம்பத்தின் உச்சியில் முன்கூடியே கொழுவி வைக்கப்பட்டுள்ள நூற்கயிற்றோடு, கொடிச்சீலை இணைக்கப்படும். சர்வதேவ தேவியரையும் சித்திரம் வரையப்பட்ட பகுதியில் ஆவாகனம் செய்யும் பொருட்டு சிவாச்சாரியார், மனதால், வாக்கால் பக்தியால் தேவ தேவியரை ஆவாகனம் செய்து, அர்ச்சனை, தீபாராதனை என்பன செய்வார். தம்பத்தடியில் காந்தாரம், தக்கராகம் போன்ற பண்களும், கீதம், இராகம், கணபதிதாளம் நிருத்தம் என்பன பாடியும், ஆடியும். வாசித்தும் காட்டுதல் வேண்டும்.

பின்னர், நூற்கயிற்றின் துணையோடு கொடிச்சீலை, தர்ப்பைக் கயிறு என்பன மெதுவாக மேலே கொண்டு செல்லப்படும். அவ்வாறு உயர்த்தி ப்ரம்மக் கிரந்தியும், சித்திரம் வரையப்பட்ட பகுதியும் யஷ்டிப் பலகைகளோடு அணைந்து இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். கொடிச்சீலையின் எஞ்சிய பகுதியை தர்ப்பைக் கயிறு, நூற்கயிறு என்பனவற்றோடு சேர்த்து நன்றாக முறுக்கி கவசம் அணியப்பட்ட கொடித் தம்பமானால் ஏழு சுற்றுக்களோ அல்லது குறைந்தது ஐந்து சுற்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பத்தைச் சுற்ற வேண்டும். கவசம் அணியாத தம்பமானால் மூன்று முறை சுற்றினால் போதுமானது.

கொடியேற்றம் முடிவடைந்ததும், தம்பஅபிஷேகம் தீபாராதனை நடைபெற்று உற்சவ மூர்த்தி, அஸ்திரதேவர், பலிபீட சகிதம், உட்பிரகாரத்தில் ப்ரம்மா உட்பட அட்டதிக்குப் பாலகர்களுக்குப் பலியிடுவர். வெளிப்பிரகாரம் இருக்குமானால் அவ்வாறே பலியிட வேண்டும்.

## கொடித்தம்பமும் கொடியேற்றமும்

கொடித்தம்பம் சூக்குமலிங்கமாகக் கருதப்படுகின்றது. மஹோற்சவம் இறைவனது பஞ்ச கிருத்தியங்களைக் குறித்து நிற்பது. தம்பத்தில் கொடியேற்றப்பட்டதும், இறைவனின் அஞ்ஞைப்படி படைத்தல் முதலியன ஆரம்பிக்கின்றன என்பதைக் குறிக்கும் என்பர்.

சரியையாளர்கள் இறையாணை பிறப்பதாகவும், ஆன்மாக்கள் ஆன்மநாயகராம் சிவபெருமானின் திருவருளைப்பெற்று உய்வடைவதையும் கொடியேற்றம் குறித்து நிற்கும் என்பர்.

கிரியையாளர்கள் சிவமும் சக்தியும் ஒன்றிணைந்த சூக்கும லிங்கமாக கொடித் தம்பத்தைப் பாவனை செய்து, அபிஷேகம், பூசை, தீபாரதனை என்பன செய்வர்.

யோக நிலையில் கொடித் தம்பத்தை மேருதண்டம் என அழைப்பர். கொடிச்சீலையை குண்டலினி சக்தி என்பர். இது முதுகெலும்பின் அடிப்பாகத்தில் பாம்பின் வடிவில் சுருண்டு தூங்கிக் கிடக்கின்றது. அக்குண்டலியினை யோக சாதனையின் மூலமாக பிராணவாயுவின் உதவியோடு சுழுமுனா நாடியூடாக மேலே செல்லும் படியாக மேலே செலுத்துவர்.

அக்குண்டலினி மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுக்தி, ஆஞ்ஞை என்னும் ஆறாதாரங்களைக் கடந்து சஹஸ்ராரம் எனப்படும், தலையுச்சியைச் சென்றடையும். அவ்வாறு சென்றடைந்ததும், சிவம் தோன்றும். சக்தியோடு சேர்ந்த சிவத்தை, சதாசிவம் என்றழைப்பர்.

"தவளே இவள் எங்கள் சங்கர
 னார்மனை மங்கலமாம்
அவளே அவர்தமக் கன்னையும்
 ஆயினள் ஆகையினால்
இவளே கடவுளர் யாவர்க்கும்
 மேலை இறைவியுமாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூவளேன் இனியொரு தெய்வமுண்
டாக மெய்த் தொண்டு செய்தே

அபிராமியந்தாதி 44

இப்பாடலில் "அவளே அவர் தமக்கு அன்னையும் ஆயினள்" என வரும் அடிகளால், சக்தி தத்துவத்தில் இருந்து சிவ தத்துவம் தோன்றுகின்றது என்பதனை நாம் காணலாம். மேலும்,

".....உயிர்த் துணையாம்
தோன்றாத் துணைக்கோர் துணையாகித்
துவாத சாந்தப் பெருவெளியில்
தூரிதங் கடந்த பரநாத
மூலம் தலத்து முளைத்த முழுமுதலே"

எனவரும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் (முத்தப்பருவம்) அடிகளாலும் அறிந்து கொள்ளலாம். (துவாத சந்தப் பெருவெளி என்பது சஹஸ்ராரத்தைக் குறிக்கும்).

மேலும் கயிறுகள் வட இட சுவாச நாடிகளைக் குறிக்கும் என்பர். ஞான மார்க்கத்தினர் கொடிச்சீலை ஆன்மாவைக் குறிப்பதென்றும் தர்ப்பையினாலான கயிறு பாசத்தைக் குறிப்பதென்றும், நூற்கயிறு திருவருட்சக்தியைக் குறிப்பதென்றும், கொடித்தம்பம் பதியைக் குறிப்பதென்றும் கூறுகின்றார்கள். பதி, பசு - பாசக்கோட்டிற்கமைவாகவே கொடியேற்றம் பாவனை செய்யப்படுவதாகும். கொடித்தம்பத்தில் கொடியேற்றப்படாத போது, சிவம் ஒடுங்கித்தானே தனித்து நிற்பது போன்றிருக்கும்.

## திருவருட்சக்தி

கொடிச்சீலையை மேலே கொண்டு செல்வதற்குப் பயன்படும் நூற்கயிற்றைத் திருவருட்சக்தியாகப் பாவனை செய்வதனால், மாபெரும் சைவ சித்தாந்த தத்துவம் இங்கு விளக்கப்படுவதை நாம் காணலாம். திருவருட்சக்தியின் துணையின்றி நாம் சிவப்பரம் பொருளை அடைய முடியாது என்பதே.

சூரியனைப்போல, திருவருளானது ஆன்மாக்களின் கர்மங்களை வளர்ப்பதாய், நல்வினையால் வரும் இன்பத்தையும், தீவினையால் வரும் துன்பத்தையும் நுகர்வித்து, ஆணவத்தின் வலியைக் குறைத்து, ஆன்மாவின் ஞான ஒளியை ஓங்குவித்து, அகத்திலும் புறத்திலும் சூழ்ந்து நிற்கும் தன்மையை உடையது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்க நுகர்வினை பேரொளியா யெங்கும்
மருக்கனென நிற்கு மருள் திருவருட்பயன்

பற்றற்றுச் செயல் புரிவதால் இருவினையொப்பும், அதனால் ஆணவமலம் வலிகெடுதலும், பின்னர் ஆன்மாவில் திருவருட்சக்தி பதிதலான சத்தினி பாதமும் ஏற்படுவது, சித்தாந்த நூற் துணிபு. திருவருட்சக்தியானது, ஆன்மாவுடனேயே இருந்து தக்க சமயமும், பக்குவமும் ஏற்படும்போது, பதியை நோக்கி ஆன்மாவைக் கொண்டு செல்லும் என்பதின் பாவனையே, நூற் கயிற்றின் மூலம் கொடிச்சீலையை மஹோற்சவ குரு மேலே இழுத்துச் செல்வது. இதனை அன்பர்கள் உணர்வார்களாகுக.

உலக வழக்கில் தாயே முதன் முதலாக குழந்தைக்கு தந்தையை அறிமுகம் செய்து வைக்கின்றாள். அதன் பின்னரே குழந்தை தன் தந்தையை அறிந்து கொள்கின்றது. இவ்வாறே ஆன்மா தன் தந்தையை அறிய திருவருட் சக்தி துணை நிற்கின்றது. அறிந்ததும் தன் தாயும் தந்தையும் ஒன்றாக இருப்பதை உணர்கின்றது.

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்"

எனவரும் திருவருட்பயன் குறட்பாவாலும்,

பேதித்து, நம்மை வளர்த்தெடுத்த
பெய்வளை தன் பாதத்திறம் பாடி"
"தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன் சரக்கும் இன்னருளே"

எனவரும் திருவாதவூர் அடிகளாரின் திருவெம்பாவை அடிகளும், திருவருட்சக்தியே முன்னின்று தன்னிலமை மன்னுயிரும் சாரத்தரும் என்பதும், சிவனடியாருக்கு முன்னின்று அருள் சுரக்கும் இன்னருளும் அவளே என்பதும் புலனாகும். இதனையே கொடியேற்றமும் நமக்கு உணர்த்தி நிற்கின்றது.

## அட்டதிக்குப் பாலகர் பலி

ஒரு மகாராஜா நகர்வலம் புறப்பட முன்னர், மந்திரி, பிரதானி பரைவீரர் என்பவர்களை அவரவர்களுக்குரிய இடங்களில் பாதுகாப்புக்கருதி ஆயத்தமாக இருக்கச் செய்வர். அவ்வாறே மஹோற்சவமும் திருவிழாவும் எவ்வித தடையுமின்றி சிறப்பாக நடைபெறுவதற்கு, ப்ரம்மன் உட்பட அட்டதிக்குக்களுக்கும் காவலர்களான அட்டதிக்குப் பாலகரை ஆயத்தமாக இருக்கும்படி வேண்டுகின்ற நிகழ்வு நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குப் பலியாக பலியுருண்டை வாழைப்பழம், பாக்கு, வெற்றிலை, நெற்பொரி என்பன கொடுக்கப்படும். மஹோற்சவ ஆரம்பம் நிறைவு ஆகிய இரு தினங்களிலும், ஒவ்வொரு சந்திக்குமுரிய மந்திரம், பண், இராகம், தாளம் நிருத்தம் என்பன இடம்பெற வேண்டும். மேலும் ஒவ்வொரு நாளும் மதியம் இரவுத் திருவிழா ஆரம்பமாவதற்கு முன்னர் மூலவருக்கு அபிஷேகம், தம்ப அபிஷேகம் என்பன நடைபெற்ற பின்னர் திக்குப்பாலகர் பலி இடம்பெறும்.

அனேகமான திருக்கோவில்கள் கிழக்கு வாயிலை உடையவை. எத்திசையைப் பார்த்து இருந்தாலும், ப்ரம்மனுக்கு முதற்பலி கொடுக்கப்படும்.

| திசை | நாயகர் | பண் |
|---|---|---|
| கிழக்கு - ப்ரம்ம சந்தி | ப்ரம்மன் | மேகராகம் |
| கிழக்கு - இந்திரசந்தி | இந்திரன் | காந்தார பஞ்சமம் |
| தென்கிழக்கு - அக்கினிசந்தி | ஆக்னி | கொல்லி |
| தெற்கு - யமசந்தி | யமன் | கௌசிகம் |
| மேற்கு - வருணசந்தி | வருணன் | சீகாமரம் |
| வடமேற்கு - வாயுசந்தி | வாயு | தக்கேசி |
| வடக்கு - குபேர சந்தி | குபேரன் | தக்கராகம் |
| வடகிழக்கு - ஈசான சந்தி | ஈசானன் | சாலாபாணி |

தேவியின் திருக்கோவில்களில் ப்ரம்மன் உட்பட அட்டதிக்குப் பாலகர்களின் சக்திகள் பூசிக்கப்பட வேண்டுமென ஆகமம் கூறுகின்றது.

## திருவிழாக்கள்

பொதுவாக பகலிலும் இரவிலும் இரண்டுவேளை திருவிழாக்கள் நடைபெறுவது வழமையிலுள்ளனது. அனேகமாக திருக்கோயில்களில் பத்து நாட்களே உற்சவம் நடைபெறுகின்றன. கொடியேற்றம் நடைபெற்று ஓரிரு நாட்கள் மட்டும், பிரதானமான உற்சவர் வீதியுலா வருவார். ஏனைய நாட்களில் அம்பாள் பிள்ளையார், சுப்பிரமணியர், சிவன் அம்மை, சண்டேஸ்வரர் ஆகிய பஞ்சமூர்த்தங்கள் இரவு வேளையில் உலாவருதல் சிறப்பாக அமையும். வெளிப்பிரகாரம் இருக்குமானால் மட்டுமே வாகனாதி உற்சவம் நடைபெறலாம். எனவே "புன்னையம்பதி" ஸ்ரீ மகா மாரியம்மன் திருக்கோயிலுக்கு வெளிப்பிரகாரம் இல்லாதிருப்பது ஒரு பெருங்குறைபாடேயாகும்.

ஐந்தொழில்களின் அடிப்படையில் திருவிழாக்கள் பின்வருமாறு பொருள்கொள்ளப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தூவஜாரோகணம் அல்லது கொடியேற்றம் | - | படைத்தல் |
| வாகனாதி உற்சவம் | - | காத்தல் |
| இரதோற்சவம் | - | அழித்தல் |
| மௌனோற்சவம் | - | மறைத்தல் |
| தீர்த்தோற்சவம் | - | அருளல் |

இவற்றைத் தவிர ஒவ்வொரு நாள் உற்சவத்திற்கும் தனிப்பட்ட தத்துவங்கள் சமய நூல்களில் கூறப்பட்டுள்ளன.

பகலிலும், இரவிலும் நடைபெறும் திருவிழாக்களின்போது, உற்சவர் உட்பிரகாரத்தை வலம் வந்து ஈசானத்தை அடைந்ததன் பின்னர், அங்குள்ள யாகசாலையின் முன்பாக தரித்திருப்பர். அங்கு அஸ்திரதேவர் பிரசன்னமாக இருக்க, பூரணாகுதி, ரனக்ஷா, பட்டுச்சாத்துதல், லாஜபுஸ்பம், தீபாராதனை, வேதம் ஓதுதல், திருமுறை பாராயணம் என்பன நடைபெற்று தம்பமண்டப வாயிலை அடைந்ததும், பாத தீர்த்தம், கட்டியம் கூறுதல் என்பன நடைபெற்று, வசந்த மண்டபத்தில் வைக்கப்படுதல் வேண்டும். இந்நிகழ்வோடு திருவிழா பூர்த்தியடையும்.

## ரனக்ஷ (யாகரட்சை)

யாகசாலையிலுள்ள ஓமத் தீயில், தர்ப்பையை எரித்து, அதன் சாம்பரை பசுநெய்யோடு கலந்து தயாரிக்கப்படும் ஒரு கூட்டு. உற்சவருக்குச் சாத்திய பின்னர், உபயகாரருக்கும் ஏனைய அடியார்களுக்கும் வழங்கப்பட்டு அவர்களும் சாத்திக் கொள்வர்.

## லாஜ புஸ்பம்

யாகசாலைக்கு முன்பாக உற்சவருக்கு லாஜ புஸ்பம் சமர்ப்பிக்கப்படும். லாஜ புஸ்பமாக தர்ப்பை நெற்பொரி, பூ என்பனவற்றைச் சேர்த்து சொரிவர்.

உலர்ந்த தர்ப்பைப் புல், வறுத்தெடுத்த நெல்லின் பொரியும், மீண்டும் முளைவிட்டு வளர முடியாதவை. அதே போன்று சிவஞானத்தால் மலபந்தங்கள் சுட்டெரிக்கப்பட்டு சிவமயமான ஆன்மா "பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன்பெய்கழல்" களில் அமைதியடைவதால் மீண்டும் பிறப்பதில்லை.

ஆகவே மஹோற்சவம் செய்வதாலும், அதில் பங்குபற்றுவதாலும், நாம் எல்லையில்லாப் பிறவிப் பெருங்கடலினின்றும் கரையேறுவதற்கான கழுவாயாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை நாம் பிம்பம் திருக்கோயிலின் மூலவரும் உற்சவரும், தம்பம், கொடி மரம், கும்பம், யாகசாலை, என்பனவற்றைப் பொதுவாகப் பார்த்தோம். மஹோற்சவம் செய்யப்படும் காலங்களில், இம்மூன்றிலும் இறை சாந்நித்தியம் பூரணமாக நிலவும் என்று ஞான நூல்கள் கூறுகின்றன.

## பிம்பம்

பிம்பம் என்பது திருக்கோவிலிலுள்ள சகல மூர்த்திகளையும் குறிக்கும். எனினும் சிறப்பாக திருக்கோவிலில் இருந்து அருளுகின்ற மூலவரையும், எழுந்து அருளுகின்ற உற்சவரையும் குறிக்கும்.

மஹோற்சவத்தின்போது. சிறப்பான ஹோமம், அபிஷேகம், கூடுதலான மந்திரப் பிரயோகம் என்பன நடைபெறுவதனால், மூலவர் உற்சவர் ஆகியோரின் சாந்நித்தியம் அதிகரிக்கும் என்பர்.

## தம்பம்

தம்பம் சூக்கும லிங்கமாகக் கருதப்பட்டு, சமஸ்த தேவ தேவியரையும் மந்திர பூர்வமாக ஆவாகனம் செய்து விஷேட அபிஷேகம், பூசை, பலி என்பன நடைபெறுவதாலும் கூடிய மந்திரப் பிரயோகத்தாலும் இறை சாந்நித்தியம் இங்கும் நிலவுகின்றது.

## கும்பம்

கும்பம் என்பது மஹோற்சவம் நிகழும்போது யாகசாலையில் தாபனம் செய்யப்படும் ஒன்பது கும்பங்களையும் குறிக்கும். யாகசாலையில் தினசரி இரண்டு வேளையாவது அங்குள்ள குண்டத்தில் ஹோமம் செய்யப்பட்டு, உற்சவர் உட்பிரகாரமாக வலம் வரும்போது யாகவிட்ஷணம், ஆகுதி, ரனக்ஷ, லாஜபுஸ்பம் என்பன சமர்ப்பிக்கப்படுவதைக் கண்கூடாக காணலாம்.

அருவம், அருவுருவம், உருவம் என்னும் இறையியல்பு தீக்கும், நீருக்கும் உண்டு. தீயானது உலகெங்கும் பரந்தம், உருக்கரந்தும் நிற்கும்போது அது கட்புலனாகாது. இரண்டு கட்டைகளை ஒன்றோடொன்றை உராயும்போது தீ பற்றிக்கொள்கிறது. இது அதன் உருவநிலை. தீ நன்றாகப் பற்றிப் பிடித்து எரியும் போது அதற்கு உருவம் இருக்கிறது. ஆனால் பிடிக்க முடிவதில்லை. இது அதனது அருவுருவ நிலையாகும்.

இதேபோன்று, நீரானது ஆவியாக இருக்கும்போது, அது கட்புலனாவதில்லை. குளிச்சியினால் பனிக்கட்டியாக மாறும்போது, அது பல உருவங்களாக மாறுகின்றது. வெள்ளமாகப் பாய்ந்து ஓடும்போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது கட்புலனாகினாலும், அதைப் பற்றிப்பிடிக்க முடிவதில்லை. இது அதன் அருவுருவ நிலை.

இறைவனின் அட்டமூர்த்தங்களுள் தீயும், நீரும் உள்ளடக்கப்பட்டுள்ளமை காண்க. தீ தான் பற்றியதைத் தூய்மையாக்கவல்லது. சிவஞானம் என்னும் தீயால், ஆன்மா தூய்மையடைவது போல, தீயும் ஏனையவற்றைத் தூய்மையாகி, தான் தூய்மையோடு இருக்கவல்லது. திருவருள் அகவிருளைப் போக்கவல்லது. அதேபோன்று, தீ புறவிருளைப் போக்கவல்லது. நிலமும் நீரும் பிற ஏதுக்களால் மாசடையவல்லவை. அதேபோன்று வானும் வளியும் அமையும். பஞ்ச பூதங்களில் பிற ஏதுக்களால் மாசடையாத ஒன்று தீயாகும்.

இறைவன் ஒளி வடிவினன் என்பதை எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்கின்றன. "சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே" என்பது மணிவாசகம். சரித்திர ஆய்வுகளுக்கு முன்னரே, சூரியன் சந்திரன், தீ ஆகிய மூன்று ஒளியுடைப் பொருட்களையும் இறைத்தன்மை கொண்டதாக மக்கள் வணங்கினர். இதுவே பிற்காலத்தில் மூவகை ஹோமங்களாக மாறின. இன்றும் மூவேளை அக்னி கோத்ரம் செய்பவர்கள் இருக்கின்றார்கள்.

இறைத்தன்மை கொண்ட தீயை மஹோற்சவ ஆரம்ப நாளில் இருந்து குறைந்தது இருவேளையாவது யாககுண்டத்தில் வளர்ப்பர். உரிய மந்திரத்தை உரிய முறையில் பிரயோகித்து வளர்க்கப்படும் தீயில் இறைவனை எழுந்தருளச் செய்வர். அவ்வாறு எழுந்தருளிய இறைசாந்தித்தியத்தை, பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள கும்ப நீரில் ஆவாகனம் செய்வர். எனவேதான் மஹோற்சவம் நடைபெறும் காலத்தில் திருக்கோயிலின் இருந்தருளி (மூலவர்) எழுந்தருளி கொடித்தம்பம், யாகசாலை என்பனவற்றில் இறை சந்நித்யம் பூரண பொலிவோடு இருந்தருளும் என அறிஞர் கூறுவர்.

மேலும்,

"நீருளான் தீயுளான் அந்தரத்துளான்
நினைப்பவர் மனத்துளான்"

- திருஞானசம்பந்தர்

"அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி"
எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனது
உருவருக்கமதாவது உணர்கிலால்"

- திருநாவுக்கரசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா"
"அருக்கனிற் சோதியமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன்"

- மாணிக்கவாசகர்

அன்பர்கள் மேற்கூறிய தேவார திருவாசகங்களையும், மேலும் பல பாடல்களையும் ஓதி உணர்வார்களாகுக.

## இரதோற்சவம் - தேரோட்டம்

மஹோற்சவத்தின்போது நடைபெறும் ஓர் முக்கியத்துவம் வாய்ந்த உற்சவமே இரதோற்சவமாகும். "புன்னையம்பதி" ஸ்ரீ மகாமாரியம்பாளுக்கு அழகான சித்திரத்தேர் ஒன்றினை உருவாக்கித் தந்த விஸ்வகுல வாலிபர் சங்கத்தினரின் முயற்சி பாராட்டத்தகுதியுடையது. பத்து நாட்கள் மஹோற்சவம் நடைபெறும் திருக்கோயில்களில், ஒன்பதாம் நாட்காலையில் இரதோற்சவம் நடைபெறுவது வழமை.

பஞ்சகிருத்தியங்களில் இரதோற்சவம் அழித்தலைக் குறித்து நிற்பது அழித்தல் என்பது ஆன்மாக்களின் மும்மல பந்தங்களை அழித்து, உய்வைத் தேடித்தருதலாகும். மலத்தை நீக்கி சிவத்தின் தன்மையைக் கொடுப்பதே ஐந்தொழிலின் நோக்கமாகும். "ஆசுடன் அடங்கப் போக்கும் அவன் போகப் புகல்" எனச் சைவ சித்தாந்தம் கூறும்.

இரதோற்சவத்திற்கு முதல்நாள், தேர் முட்டியில் இருந்து தேரை எடுக்கும்போது, தேருக்குக் காவலாக இருக்கும் பைரவருக்குப் பலி பொங்கல், என்பன கொடுத்துப் பூசை செய்ய வேண்டும் என்பது ஐதீகம்.

முப்புரங்களை எரிப்பதற்கு சிவபெருமான் தேரேறிச் சென்றார் என்பது புராணவரலாறு. "முப்புரம் என்பது மும்மல காரியம்" என்னும் தத்துவத்தை திருமந்திரம் இயம்புகின்றது. தேருக்கு சுவாமியை உரிய பீடத்தில் வைத்து எழுந்தருளச் செய்வர். உள்வீதி வலம்வரும் போது, சுவாமியைக் காவுபவர்கள் மூன்றடி முன்னும் இரண்டடி பின்னுமாக வைத்துச் செல்வது வழமை. இவ்வாறு உட்பிரகாரத்தை வலம்வந்து திருக்கோயிலின் பிரதான வாயிலை அடைவர்.

பிரதான வாயிலில் கெந்தோற்சவம் இடம்பெறும். கெந்தோற்சவம் என்பது காந்தர்வர்கள் செய்யும் பூசையாகும். அதன் பின்னர் சுவாமியைத் தேரில் ஆரோகணிக்கச் செய்வர். அஸ்திரதேவர். கட்டியப்போல் என்பனவும் சுவாமியுடன் தேரில் இருக்க வேண்டியவையாகும். மிக முக்கியமாக தேரில் உற்சவர் ஆரோகணிக்கும்போது ஒரு சிறிய விநாயகரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவத்தை உடன்கொண்டு செல்வது சாலச்சிறந்தது. ஏனெனில், விநாயகர் தன் தந்தையின் தேர் அச்சையே சேதம் பண்ணியவர். அவர் உடன் இருப்பதால் எவ்வித தீமைகளும் ஏற்படாமல் காப்பாற்றுவார். சண்டேஸ்வரியையும் எடுத்துச் செல்ல விரும்பினால், பிரதான உற்சவரின் பின்புறமாக வைத்து கொண்டு செல்லலாம்.

இரதோற்சவம் முடிவடைந்து, பிரதான வாயிலை வந்தடைந்ததும் உற்சவருக்கு பச்சை சாத்துவர். பச்சை சாத்துதல் என்றால் உற்சவரை மருக்கொழுந்து, வில்வம், வேம்பு, துளசி போன்ற பத்திரங்களால் அலங்கரித்து, பச்சை நிறப்பாட்டுச் சாத்துதலாகும்.

இது ஏன் செய்யப்படுகின்றதென்றால் கோபாவேசத்தோடு தேரில் சென்ற இறைவன் அழித்தல் எனப்படும் தொழிலைச் செய்து, திருக்கோயிலை அடைவதால், பச்சை சாத்தி குளிர்ச்சி அடையச் செய்வதாக ஐதீகம்.

அன்றிரவு வழமையான கிரியைகளையும் திருவிழாவும் செய்து தேர் மக்கள் வாழும் வீதிகளூடாகச் சென்றமையால் ஏற்படக்கூடிய அசௌசத்தைப் போக்குமுகமாக உற்சவருக்கு பிராயச்சித்தமும் செய்தல் வேண்டும். மேலும் தேரடி பார்க்கும் உற்சவமும் நிகழும். அதாவது உற்சவர்தான் ஆரோகணித்துச் சென்று திரும்பிய தேரைப்பார்வையிடல் என்பது பொருள்.

## சூர்ணோற்சவம் - பொற்சுண்ணம் இடித்தல்

தீர்த்தோற்சவத்தன்று, சுவாமி தீர்த்தமாட எழுந்தருளுவதற்கு முன்பாக, மஞ்சள், அறுகு, நல்லெண்ணெய், வாசனைத் திரவியங்கள் முதலியவற்றை உரலில் இட்டு இடிக்கும் ஓர் நிகழ்வே சூர்ணோற்சவமாகும்.

பொற்சுண்ணம் இடிக்கும் இடத்தைச் சுத்தம் செய்து, அஸ்திர தேவரை எழுந்தருளச் செய்து உரல் உலக்கை என்பனவற்றைப் பூசித்து, பெரிதாடனம் முதலிய கிரியைகளைச் செய்வர்.

இந்நிகழ்வில், மாணிக்கவாசக சுவாமிகளால் தில்லையில் அருளிச் செய்யப்பட்ட திருப்பொற்சுண்ணப் பாடல்களைப் பாடுவது வழமை.

நான், எனது எனும் எண்ணம் மனிதனைக் கீழ்நிலைக்குத் தள்ளிவிடும். அகங்கார மமகாரங்களை திருவருட்சக்தியால் இடித்து சூரணமாக்கி இறைவனிடம் சமர்ப்பித்தலே இதன் பொருளாகும். ஸ்ரீ இராமகிருஷ்ணர், பழுக்காத நான் என்றும் பழுத்த நான் என்றும் இருவகையாகக் கூறுவார். இதை நான் செய்தேன் அதை நான் செய்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இறுமாந்திருப்பது பழுக்காத 'நான்', நான் இறைவனுடைய அடிமை, நான் ஒரு பக்தன், என்று அடங்கியிருப்பது பழுத்த "நான்" இந்தப் பழுத்த "நான்" சிலகாலத்திற்கு ஒருவனிடம் இருக்கும் என்றும் கூறியுள்ளார். "யான் எனது என்று அற்ற இடமே திருவடியாம்" என்பது கந்தர் கலிவெண்பா.

திருப்பொற்சுண்ணம் இறைவனின் திருமஞ்சனத்திற்காக இடிக்கப்படுவது. இதனால் ஏற்படும் விளைவு ஆனந்தமனோலயம் எனப்படும்.

## தீர்த்தமாடுதல் - தீர்த்தோற்சவம்

இரதோற்சவத்தைப் போல் தீர்த்தோற்சவமும் ஓர் முக்கியமான நிகழ்வாகும். இது பஞ்சகிருத்தியங்களில் அருளலைக் குறித்து நிற்கும். இறைவனே பல்வகைப்பட்ட தீர்த்தங்களாக உள்ளார் என்பதைச் சைவசமயம் கூறும். தீர்த்தமாடுவதால் நாம் பிறவித் துயர் நீங்கிப் பெருவாழ்வு வாழலாம் என்பதை "ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" என மிகத் தெட்டத் தெளிவாக திருவாசகம் கூறும்.

நாம் பிறவித் துன்பத்தைத் தீர்த்துக் கொள்வதற்காக கங்கை, யமுனை, காவிரி போன்ற புண்ணிய நதிகளிலும், குமரித்துறை, சேது, இராமேஸ்வரம், குடந்தை போன்ற இடங்களிலும், தீர்த்தமாடுகின்றோம். பங்குனிமாத உத்தர நட்சத்திரம் மிகவும் புனிதமானதாகக் கூறப்படுகின்றது. அன்று தமிழ் நாட்டில் பல தெய்வத் திருத்தலங்களில், இரதோற்சவம், தெய்வீகத் திருக்கலியாணம், தீர்த்தோற்சவம் என்பன நடைபெறுவது கண்கூட.

பங்குனி உத்தர தீர்த்தோற்சவம் கடற்கரையில் நிகழ்வது உத்தமமாகும். எல்லாப் புண்ணிய நதிகளும் நிறைவில் கடலிலேயே சங்கமமாகின்றன.

தீர்த்தோற்சவத்திற்கு உற்சவர் எழுந்தருளும்போது, திருக்கோயிலின் உட்பிரகாரத்தை வலம்வந்து, வழமையான யாக வீட்ஷணம். ஆகுதி என்பன வழங்கப்பட்டு, வாகனாரூடராக தீர்த்தோற்சவத்திற்கு எழுந்தருளுவார். திருத்தொண்டர் புராணம் கூறும் அடியார்கள் சரிதத்தில், எம்பெருமான் இடபாரூடராக எழுந்தருளியே அருளலைச் செய்ததை அப்புராண வாயிலாக அறிகிறோம்.

மேலும் பிரதான உற்சவரோடு அஷ்திரதேவர், கட்டியப்பொல் என்பன உடன் கொண்டு செல்லப்பட வேண்டும். சண்டேஸ்வரியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவரை எடுத்துச் செல்லுதல் நன்று. இலங்கையில் பலதிருக் கோயில்களில் பஞ்சமூர்த்தங்கள் எடுத்துச் செல்லப்பப்படுகின்றன.

தீர்த்தோற்சவத்தின்போது அஸ்திர தேவருக்கே அபிஷேகம் நடைபெற்று தீர்த்தமாடப்படும்.

"மூர்த்திதலந் தீர்த்தம்
முறையாற் றொடங்கினார்கோர்
வார்த்தைசொலச் சற்குருவும்
வாய்க்கும் பராபரமே"

- தாயுமானவர்.

## யாககும்ப அபிஷேகம்

தீர்த்தோற்சவம் நிறைவடைந்து, திருக்கோயிலை அடைந்ததும், உற்சவருக்கு பாததீர்த்தம், ஆரத்தி என்பன நடைபெறும். பின்னர் உட்பிரகாசத்தை வலமாக வந்து யாகசாலையை அடைந்ததும், யாக கும்பபூசை, விஷேட திரவியங்களைக் கொண்டு ஹோமம் செய்வர். மகாபூரணாகுதி, யாகவீட்ஷணம் ரனக்ஷ, லாஜ புஸ்பம், தீபாராதனை வேதம் ஓதுதல், மகா ஆசீர்வாதம், திருமுறை ஓதுதல் என்பன இடம்பெறும். அங்குரார்ப்பணத்தின்போது விதைக்கப்பட்ட நவதானியப் பயிர்களை அறுவடை செய்வர்.

பின்னர் உற்சவரை தம்பத்தடிக்கு கொண்டு வந்த, மூலவரைப் பார்த்தவாறு தரித்திருக்கச் செய்வர். யாகசாலையில் பத்து நாட்களாக வைத்துப் பூசிக்கப்பட்ட ஒன்பது கும்பங்களும் எடுத்துவரப்பட்டு, அதில் நிலவும் இறை சாந்நித்தியம் கருவறையிலுள்ள மூலவேரோடு ஒடுக்கப்பட்டு, அக்கும்பங்களில் உள்ள புனித நீரை மூலவருக்குச் சொரிதல் யாக கும்ப அபிஷேகம் எனப்படும்.

அறுவடை செய்த நவதானியக் தளிர்களை மூலவர் உற்வசர், பரிவாரமூர்த்திகள் முதலியவற்றிற்குச் சாத்தி தீபாராதனை செய்வர்.

## திருப்பொன்ஊஞ்சல்

தீர்த்தோற்சவம் யாககும்ப, அபிஷேகம் என்பன நிறைவெய்திய பின்னர், அன்று மாலை திருப்பொன்னூஞ்சல் இடம்பெறுவது வழமை. அழகாக அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலில் உற்சவரை எழுந்தருளச் செய்வர். தீபாராதனை, அர்ச்சனை என்பன நடைபெற்று. வேதம் திருமறை என்பன ஓதப்படும் ஒவ்வொரு திருக்கோயிலுக்கும், அந்தந்த மூர்த்திக்குரிய சிறப்பான பொன் ஊஞ்சல் பாடல்கள் உண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்ஊஞ்சல் பாடல்கள் ஒவ்வொன்றும் முடிவடைந்ததும் பழம் பாக்கு வெற்றிலை என்பன நைவேத்தியம் செய்யப்பட்டு தீபாரதனை நடைபெறும். நிறைவாக ஆரத்தி எடுக்கப்பட்டு, உற்சவரை தம்பத்தின் வலமாக எழுந்தருளச் செய்வர்.

திருப்பொன்னூஞ்சல் என்பது, தீர்த்தோற்சவத்தால் அடியார்களுக்கு திருவருள் செய்த திருவருட் சக்தியைப் போற்றி வணங்குதலாகும்.

## துவஜாவரோகணம் - கொடியிறக்குதல்

திருப்பொன்னூஞ்சல் முடிவடைந்து உற்சவர் தம்பத்தடிக்கு எழுந்தருளுவர். தம்ப அபிஷேகம் முடிவடைந்ததும், மந்திரங்கள் மூலமாகக் கொடியேற்றத்தின்போது ஆவாகனம் செய்யப்பட்ட சமஸ்த தேவதேவியரையும் விசர்ஜனம் செய்வர். அதாவது சமஸ்ததேவ தேவியரையும் அவரவர் யதாஸ்தானத்திற்குச் செல்லுமாறு மந்திர பூர்வமாக வேண்டிக் கொள்வர்.

பின்னர் தம்பத்தில் சுற்றிக்கட்டப்பட்ட தர்ப்பைப்பாயை மெதுவாக அகற்றி, தம்பத்தைச் சுற்றிப் படர்ந்திருக்கும் கொடிச்சீலையை, நூற்கயிற்றின் உதவியோடு மெதுவாகவும், பாதுகாப்பாகவும் கீழே இறக்குவர். கொடிச்சீலை, தர்ப்பைக் கயிறு, தர்ப்பையாலான பாய், நூற்கயிறு என்பனவற்றை ஒன்றாகச் சுற்றி மூலவரின் வாகனமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள நந்தியின் மேல் வைக்க வேண்டும்.

நந்தியின் மேல் வைக்கப்பட்டுள்ள கொடிச்சீலை முதலியவற்றை கருவறைக்குக் கொண்டு சென்று. கொடிச் சீலையில் உள்ள இறை சாந்தித்தியத்தை மூலவரில் ஆவாகனம் செய்வர்.

பின்னர் உற்சவர், கொடிச்சீலை அஸ்திரதேவர், பலிபீடம் என்பன உட்பிரகாரத்திற்கு எடுத்துச் சென்று, சந்தி விசர்ஜனம் செய்யப்படும், சந்திகளுக்குரிய பலி, பண், இராகம், கீதம் என்பன கொடியேற்றத்தின்போது நடந்தது. போன்று நடைபெறும் இவ்வாறு சந்தி விசர்ஜனம் நடைபெற்று ஈசானத்தை அடைந்ததும், விகடக்கூத்து அல்லது பூதநாட்டியம் இடம்பெறும். இவ்வாறே வெளிப்பிரகாரத்திலும் நடைபெறும். வெளிப்பிரகாரம் வலம்வந்து திருக்கோயில் வாயிலை அடைந்ததும் பாததீர்த்தம் எனபன நிறைவுற்று. மீண்டும் உள்வீதியுலா இடம்பெறும்.

## மௌனோற்சவம்

மௌனம் என்பது வாக்கு, மனம், காயம் ஆகிய மூன்றையும் கடந்து சுழுத்தி மோனமாய் சும்மா இருத்தலைக் குறிக்கும் என்பர். இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சகிருத்தியங்களில் மறைத்தலைக்குறிக்கும். "மோனம் என்பது ஞானவரம்பு" என்னும் வாக்காலும், "சும்மாஇரு சொல்லற என்றலுமே, அம்மா பொருளொன்று மறிந்திலனே" என்னும் அருணகிரியார் வாக்காலும், இதனை அறிந்து கொள்ளலாம்.

மௌனோற்சவம் பின்வருமாறு அமைவது சாலச்சிறந்தது.
தென்கிழக்கு தொடக்கம் தெற்குவரை - வேதபாராயணம்
தெற்குத் தொடக்கம் தென்மேற்குவரை - பண்ணிசை
தென்மேற்குத் தொடக்கம் தெற்குவரை - சங்கநாதம்
மேற்கில் இருந்து வடமேற்குவரை - கீதம் அல்லது நாதஸ்வரம் மட்டும்
வடமேற்கில் இருந்து வடக்கு - மத்தளம் என்னும் மேளம் மட்டும்
வடக்கில் இருந்து வடகிழக்குவரை - மௌனம்

நிறைவாக மகாபேரி எனப்படும் காண்டாமணியுடன் சகல வாத்தியங்களும் முளங்க அடியார்களின் அரோகரா ஓசையும் முளங்க, உற்சவர் தம்பமண்டபத்தை அடைவர் பாததீர்த்தம் பாதசேவை என்பன வழங்கப்பட்டு மூலவரை நோக்கியவாறு மகாமண்டபத்திலுள்ள திருச்சபைக்கு எழுந்தருளச் செய்வார்கள்.

இக்கிரியைகளால் நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய விடையம் என்பனவென்றால், மஹோற்சவம் நடைபெறும்போது இறை சாந்நித்தியத்தோடு விளங்கிய கும்பங்கள், கொடிச்சீலை, உற்சவர் ஆகியவற்றின் இறை சாந்நித்தியம், நிறைவாக மூலவேரோடு அதாவது திருக்கோயிலில் இருந்தருளுகின்ற மூலவேரோடு ஒன்றிக்கப்படுகின்றன. மஹோற்சவம் நிறைவடைந்ததன் பின்னர் மூலவர் மட்டுமே சுயம்பிரகாசியாக இருந்து அருள்பாலிக்கின்றனர் என்பதே. மஹோற்சவத்தின்போது மூன்றாகப் பிரிந்து அருள்பாலித்த மூலவரின் சாந்நித்தியம் நிறைவாக மூலவரிடம் ஒடுக்கப்படுகின்றது.

## சண்டேஸ்வரர் உற்சவம்

சத்தியின் திருக்கோயில்களில் சண்டேஸ்வரரின் சத்தி பூசிக்கப்படும். இவரை சண்டேஸ்வரி என அழைப்பர். மஹோற்சவத்தின் நிறைவாக இந்த உற்சவம் நிகழ வேண்டும் என்பது ஆகம விதியாகும். சிவபூசையின் பலனைத் தந்தருளுபவர் சண்டேஸ்வரர்.

சைவ சமயம் சிவசம்பந்தம் உடையது. அடியார்கள் பல்வேறு திருவுருவங்களை வைத்து வழிபடுவர். திருவுருவ வழிபாடு சைவசமயத்துக்கு அடிப்படையான ஒன்றாகும். "நிஜம் யாருடையதோ நிழலும் அவருடையதே" என்று ஞானிகள் கூறியுள்ளார்கள். நாம் சிவனாக, சத்தியாக, கணபதியாக, முருகனாக, பைரவராக இன்னும் பல பெயரிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவிலும் இறைவனை வழிபடுகின்றோம். எந்தத் திருவுருவை வழிபட்டாலும் அத்திருவுரு மூலம் அருள்பாலிப்பவர் மாதொரு பாகரான சிவபெருமானே என்பது சைவநூற் துணிபு.

அண்டர் பிரானும் தொண்டர் தமக்கு
அதிபனாக்கி அனைத்தும் நாம்
உண்டகலமும் உடுப்பனவும்
சூடுவனவும் உமக்கு ஆகச்
சண்டீசனும் ஆம் பதந்தந்தோம்
என்று அங்கு அவர் பொன் தடமுடிக்குத்
துண்டு மதிசேர் சடைக் கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.

- சண்டேஸ்வரநாயனார் புராணம்

இப்பாடலின் பிரகாரம் சண்டேஸ்வரமூர்த்திக்கு சிவ நிர்மாலியங்களைச் சாத்த வேண்டும். சண்டேஸ்வரமூர்த்திக்கு அபிடேகம் முதலியன செய்து, அலங்கரித்து, பூசை தீபாரதனை முதலியன செய்து உட்பிரகாரம் வெளிப்பிரகாரங்களை வலம் வரல் வேண்டும். பின்னர் பாததீர்த்தம் என்பன கொடுத்து, நடந்து, முடிந்த மஹோற்சவத்தின் பலனை எமக்குத் தந்தருள வேண்டும் எனப்பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

சண்டேஸ்வர உற்சவத்தின் பின்னர் மூர்த்திகளுக்குக் கட்டப்பட்ட ரக்ஷா பந்தனங்களை நீக்கி, சிவாச்சாரியாரும் தனது ரக்ஷாபந்தனத்தை நீக்கிக் கொள்வார்.

## ஆச்சாரிய உற்சவம்

மஹோற்சவத்தின் போது கிரியைகள், பூசைகள், உற்சவங்கள் என்பனவற்றைப் போறுப்பெற்று சிறப்பாக நடாத்தியமைக்காக, சிவாச்சரியாரை திருக்கோயிலின் அறங்காவலர்களும், பொதுமக்களும் கௌரவிக்கும் ஓர் நிகழ்வே ஆச்சாரிய உற்சவமாகும்.

## பிராயச்சித்தம்

மஹோற்சவம் நிறைவு பெற்ற பின்னர் மறுநாள் மூலவர் உட்பட எல்லா மூர்த்திகளுக்கும் குற்றங்குறைகளைப் போக்குமுகமாக பிராயச்சித்தம் செய்தல் வேண்டும். மேலும் சிறப்பாகச் செய்ய வேண்டிய பிராயச்சித்தங்களும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத் திருக்கோயில்களில் நடைபெறும் பூசைகள், திருவிழாக்கள் என்பனவற்றைப் பரார்த் பூசைகள் என்பர். பரார்த்தம் என்பது பிறருக்காகச் செய்தல் எனப்பொருள்படும். மக்கள் ஒன்றுகூடி ஆலயம் அமைத்து, முறைப்படி சிவலிங்கம் முதலிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து வழிபடுதல். இங்கு எல்லோரும் பூசை முதலிய கிரியைகளைச் செய்ய முடியாது. ஆகவே ஆகம விதிமுறைகளை நன்கு அறிந்த ஒருவரை ஆலய அர்ச்சகராக நியமிக்கின்றோம். ஆலய அர்ச்சகர் அல்லது குருக்கள், பணத்தை மையமாகக் கொண்டு இயங்காமல், சேவை மனப்பான்மையோடு சேவையாற்றுவார்களேயானால், தாம் சார்ந்த சைவ சமயத்திற்குப் பெருமை சேர்ப்பவர்களாவர்.

மஹோற்சவம் நடைபெறும்போது, சுமார் 150 பிழைகள் தவறுகள் என்பன ஏற்பட வாய்ப்பு இருப்பதாக காரணாகமம் கூறுகின்றது. அவ்வாறு பிழைகளோ தவறுகளோ ஏற்படும்போது. அந்த இடத்திலேயே அதற்குரிய பிராயச்சித்த ஹோமம் முதலிய கிரியைகள் செய்யப்பட வேண்டும். இதன் விளக்கத்தை காரணாகமத்தில் உள்ள, பிராயச்சித்த விதிகள் என்னும் பகுதியை வாசித்து விளங்கிக் கொள்ளலாம். மேலும், மஷோற்சவம் முடிந்த மறுநாள் மூலவர் உட்பட எல்லா மூர்த்திகளுக்கும் பிராயச் சித்த அபிஷேகம் செய்வது வழமையில் உள்ளது.

ஒவ்வொரு திருக்கோவிலிலும் நடைபெற்றுவரும் திருவிழாக்கள். மஹோற்சவம் என்பனவற்றின் போது பின்பற்றப்படும் முறைகள் கோவிலுக்குக் கோவில் மாறுபட்டுக் காணப்படலாம். காலங்காலமாக பின்பற்றப்பட்டு வரும் பூசைமுறைகளே அவையாகும். உதாரணமாக, வெருகலம் பதியில் சித்திரவேலாயுத சுவாமி திருக்கோவிலில் மஹோற்சவம் நடைபெறும் தினங்களில் குறிப்பிட்ட சில நாட்களுக்கு உட்பிரகாரம் மட்டுமே வலம் வந்து ஈசானத்தில் யாகபீட்ஷணம் இடம்பெறும். உட்பிரகாரமும். வெளிப்பிரகாரமும் வலம்வரும்போது, உட்பிரகார ஈசானத்திலுள்ள யாகம் கலைக்கப்பட்டு, வெளிப்பிரகாரத்திலுள்ள யாகசாலையில் யாகவீட்ஷணம் இடம்பெறும். இது பல்லாண்டு காலமாகப் பின்பற்றப்படும் முறையாகும். எனவே அர்ச்சகர்களோ அல்லது மஹோற்சவ சிவாச்சாரியாரோ திருக்கோவில் நடைமுறையிலுள்ள விடயங்களை முதற்கண் அறிந்து கொள்வது அவசியமாகும்.

பூனூல் அணிந்து கொண்டு வருபவர்கள் பலர் தங்களைக் குருக்கள் என்று கூறிக்கொள்கின்றார்கள். இவர்களில் எவரிடம் உண்மை உண்டு. எவரிடம் போலித்தனம் உண்டு என்பதை அறிந்து கொள்வது இலகுவான காரியமல்ல. நான் "புன்னையம்பதி" ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயத்திற்கு ஒரு சிறந்த குருக்களைத் தேடுமுகமாக கொழும்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றிருந்தேன். அங்கு ஒரு பிரபலமான குருக்கள் ஒருவரைச் சந்தித்து விடயத்தைக் கூறினேன். அவர் எனக்குத் தந்த பதில் இதோ. "மாண்டர் ஒரு குமியல் அழுகல் தேங்காய்கள் இருக்கின்றதாக வைத்துக் கொள்ளுங்கள். எல்லாமே அழுகல். ஆனால் நமது தேவைக்காக அதில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டும்" எனப் பதிலுரைத்தார். இது எனக்கு ஆச்சரியத்தையும், துக்கத்தையும் தந்தது.

திருவருளை வாரிவழங்க வேண்டிய சைவத் திருக்கோயில்கள் இன்று வியாபார நிலையங்களாக மாறிவருவது கவலைக்குரிய ஒன்றாகும். சைவர்கள் மதம் மாறுகிறார்கள் என்று கூக்குரல் இடுகிறோம். இதைத் தடுத்து நிறுத்த நாம் என்ன செய்கின்றோம். திருக்கோயில்களில் பெரும் பொருட்செலவில் விழாக்கள், பூசைகள், அபிஷேகங்கள் ஆகியவற்றைச் செய்யும் நாம், நம் அருகாமையில் வாழ்ந்து கொண்டு அல்லலூறும் ஏழைகளுக்கு என்ன செய்தோம்? என்று சிந்தியுங்கள். கல்வி கற்க வசதியற்ற ஏழைச் சிறார்களுக்கு அவர்களின் கல்விக் கண்ணைத் திறக்க வழிசெய்தோமா? "மக்கள் சேவையே மகேசன் பூசை" என்னும் சுவாமி விவேகானந்தரின் வாக்கை நமது குறிக்கோளாகக் கொண்டு வாழ்வோமாக.

மஹோற்சவம் என்னும் இக்கட்டுரை புன்னையம்பதி ஸ்ரீ மகாமாரியம்மன் திருக்கோவிலை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. மஹோற்சவம் நிகழும்போது பல்வேறு விடயங்கள், உற்சவங்கள் முதலியன இடம்பெறுகின்றன. அவற்றின் நோக்கங்களையும், விளக்கங்களையும் சாதாரணமாக எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே ப்ரம்ம ஸ்ரீ பூரண, தியாகராஜ குருக்கள் அவர்களின் ஆலோசனையின் படியும், வழிகாட்டலின்படியும் எழுதியுள்ளேன். கிரியை முறைகளை அறிய விரும்புவோர் அது சம்பந்தப்பட்ட ஆகமங்களைக் கற்றறிந்த விற்பன்னர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளலாம். அன்பர்கள் குற்றம் நீக்கி குணத்தைக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**உசாத்துணை நூல்கள்:**


1) சைவத்திருக்கோவில் கிரியை நெறி
   - கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள்
2) சிவஞானபோத ஆராய்ச்சி மறைமலையடிகள்
3) திருவருட்பயன்
4) சைவ சமய சிந்தாமணி - சைவப்புலவர், தேசிகமணி கா. அருணாசல ஆசிரியர்
5) சைவமும் வைணவமும் - மறைமலையடிகள்
6) காரணாகமம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வாலிப சங்க உறுப்பினர்கள் - 2007

பதிவிலக்கம் HA/04/BT/257

**தலைவர்:** திருநாவுக்கரசு பிரசாத் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்)

**உபதலைவர்:** சண்முகராஜா சோதீஸ்வரராஜா (முகாமைத்துவ உதவியாளர்)

**செயலாளர்:** செல்வராஜா டினேஸ்காந்

**உபசெயலாளர்:** கோவிந்தசாமி ஷைலகோபன்

**பொருளாளர்:** குணசேகரன் கிஷோர்

**உபபொருளாளர்:** திருநாவுக்கரசு பிரதீப் (தாதிய உத்தியோகத்தர்)

### நிர்வாக சபை உறுப்பினர்கள்:

திருநாவுக்கரசு சஞ்ஜீவ்

அருளானந்தம் ஷேசகோபன்

தட்சணாமூர்த்தி துஷாந்தன்

ஜீவக்குமார் பகிரதன்

தட்சணாமூர்த்தி ஹரிதாஸ்

மகேந்திரன் கலைவாணன்

செல்வராஜா கிஷோபன்

### கணக்கு பரிசோதகர்:

திரு. சிதம்பரநாதன் சண்முகநாதன்
(முகாரி தே.க.கம்பனி லிமிடட், வாழைச்சேனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேல்வரிசை – இ. வ கோவிந்தசாமி ஷைலகோபன், குணசேகரன் கிஷோர், சாந்தலிங்கம் சுதர்சன், திருநாவுக்கரசுபிரசாத், திருநாவுக்கரசு பிரதீப், செல்வராஜா டினேஸ்காந், செல்வராஜா கிஷோபன்
கீழ்வரிசை – இ. வ. திருநாவுக்கரசு சஞ்சீவ், தட்சணாமூர்த்தி ஹரிதாஸ், தட்சணாமூர்த்தி துஷாந்தன், ஜீவகுமார் பகிரதன்
சமூகமளிக்காதவர்கள் : அருளானந்தம் சேஷகோபன், மகேந்திரன் கலைவாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முன்வரிசை – இ.வ.: திருமதி. நா. யோகராஜா, செல்வி. லீ. தியாகராஜா, திருமதி. ச. பழனியப்பா, திருமதி. ப. ஞானமுத்து, திருமதி. சரவணபவான், திருமதி. வ. தம்பிப்பிள்ளை, திருமதி. கௌ. மகேந்திரன்
பின்வரிசை – இ.வ.: திருமதி. ஜெ. லோகானந்ததாசன், திருமதி. த. இரத்தினகோபால், திருமதி. ம. சுந்தரமூர்த்தி, திருமதி. இ. ஜெயச்சந்திரன், திருமதி. நி. கோவிந்தசாமி.
சமூகமளிக்காதவர்கள்: திருமதி. த. சந்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு – கோட்டைமுனை
# ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயம்

## மாதர் சங்கம்

பதிவிலக்கம் : HA/4/BT/249

### நிருவாகசபை

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திருமதி. நித்தியாதேவி கோவிந்தசாமி |
| உபதலைவர் | : | திருமதி. பவளம் ஞானமுத்து |
| செயலாளர்: | | திருமதி. ஜெயா லோகானந்ததாசன் |
| உபசெயலாளர்: | | திருமதி. சரஸ்வதி பழனியப்பா |
| பொருளாளர் | : | செல்வி. லீலாவதி தியாகராஜா |
| உபபொருளாளர் | | திருமதி. மல்லிகா சுந்தரமூர்த்தி |

### செயற்குழு:

திருமதி. சவுந்தரலட்சுமி சரவணபவான்
திருமதி. தவமணி சந்தனம் (விவசாய உத்தியோகத்தர்)
திருமதி. கௌரிமலர் மகேந்திரன் (ச.வி.இ.ந.க. விரிவுரையாளர்)
திருமதி. தவமணி இரத்தினகோபால்
திருமதி. வடிவாம்பிகை தம்பிப்பிள்ளை
திருமதி. நாகேஸ்வரி யோகராசா
திருமதி. இராசலெட்சுமி ஜெயசந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு கோட்டைமுனை

# ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயத்தில் ஸ்ரீ மகாமேரு (ஸ்ரீ சக்கரம்)

புன்னையம்பதி ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயத்தில் நடைபெறும் 3வது மகா கும்பாபிஷேக தினமாகிய ஜனவரி 28ம் திகதி அன்னையின் பாதத்தில் ஸ்ரீ மகாமேரு வைக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்ரீ மகாமேரு தத்துவத்தை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஸ்ரீ மகாமேரு என்பதன் விளக்கம் மகா என்றால் பெரிய என்றும், மேரு என்றால் மலை என்றும் பொருள்படுவதினால் பெரியமலை என்பதாகும். ஸ்ரீ சக்கரத்தை உயரமாகவும், உருவமாகவும் செய்தால் அதனையே ஸ்ரீ மகாமேரு என்கின்றோம். இதுவே பூரண மேரு என்றும் அழைக்கப்படுகின்றது. இவற்றை உயரத்தில் இருந்து பார்த்தால் ஸ்ரீ சக்கரத்தின் வடிவம் தெரியும். ஸ்ரீ மகாமேருவை உயரம், அகலம், நீளம், அனைத்தும் ஒரே அளவாகவே அமைக்கவேண்டும். 16 உயரதளங்களாக அமைக்க வேண்டும். கீழிருந்து 1, 2, 3, தளங்கள் சதுரமாகவும், நான்கு பக்கமும் வழிவைத்தும், 4, 5, 6, தளங்கள் வட்டமாகவும், 7வது தளம் 16 கமலங்களுடனும், 8வது தளம் வட்டமாகவும், 9வது தளம் 8 கமலங்களுடனும், 10வது தளம் வட்டமாவும், 11வது தளம் 14 முக்கோணங்களுடனும், 12வது தளம் 10 முக்கோணமும், 13வது தளம் 10 முக்கோணமும், 14வது தளம் 8 முக்கோணமும், 15வது தளம் மூன்று முக்கோணமும் 16வது தளம் உருண்டை வடிவில் பிந்து என அமைக்கப்படுகின்றது. இதில் மேலும் ஆண்கள் வழிபடும் வகையில் ஒருபக்கம் (பெண்கோணம்) சக்தி கோணமும், பெண்கள் வழிபடும் வகையில் எதிர்ப்பக்கம் (ஆண்கோணம்) சிவகோணமும் அமைந்துள்ளது. ஆண், பெண், இரண்டு கோணங்கள் ஒருங்கே சேர்ந்திருப்பதனால் இவற்றை ஸ்ரீ பிரம்மச்சக்கரம் மற்றும் ஸ்ரீ பிரம்மேரு என்றும் பெயர்படும்.

### ஸ்ரீ மகாமேரு பூஜை செய்யும் காலம்

உலகினை படைத்து ஆண்டவர்களைத்தான் அதாவது நமக்கு முன்னால் வாழ்ந்தவர்களைத்தான் ஆண்டவர்கள் என்கிறோம். இதுபோல் உயிருடன் இருந்து இறந்தவர்களைத்தான் இறைவன் அல்லது இறைவி என்கின்றோம். அதுபோல் வாழ்நாளை கடந்தவர்களைத்தான் கடவுள் என்கிறோம். இதன் காரணமாகத்தான் வேதம் மற்றும் புராணங்களிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்தும் இறை உருவங்களிலும் உறவுமுறைகளைப் பார்க்கின்றோம். மேலும் நம் உறவுமுறைகளில் மிகமுக்கிய உறவாகக் கருதப்படும் தாய் தந்தை உறவை வைத்தே இறை வழிபாட்டில் அம்மையே அப்பா என்று சொல்லி வழிபாடு செய்வதை இன்றும் காண்கின்றோம். இப்படிப்பட்ட இறை உருவங்களை குறிப்பாக ஸ்ரீ மகமேரு உருவத்தை ஆலயங்களில் அமைத்து பலரும் வழிபாடு செய்யும் வகையில் ஐந்து காலபூஜை மூன்று காலபூஜை, அல்லது ஒரு காலப்பூஜை, அபிஷேக ஆராதனை நடத்தப்படுகின்றது. ஆனால் நமது இல்லங்களில் ஸ்ரீ மகாமேரு சிலையை வைத்து பூஜை செய்வது என்றால் சில விதி விலக்குடன் செய்யலாம்.

## மனித உடலே ஸ்ரீ மகாமேரு தத்துவமாகும்

ஆண்கள் தன்னை உணர்ந்தால் பெண்ணை உணரலாம். பெண்ணை உணர்ந்தால் மண்ணை (பூமியை) உணரலாம். மண்ணை உணர்ந்தால் விண்ணை உணரலாம். அண்டத்தில் நடப்பது பிண்டத்தில் நடைபெறுகிறது என்ற வாக்கியப்படி உடலே பெருங்கோயில் உள்ளமே இறைவனாகும் (பிரம்மமாகும்) எனப்படுகின்றது. நம் ஆண், பெண் உடலும் உள்ளமும் எவ்வாறு பிரம்மமாகிறது. பொதுவாக ஆண்கள் திருமணத்திற்கு முன் சுத்த ஆண் தன்மையுடன் இருந்து திருமணத்திற்கு பின் பெண் தன்மை பெற்றும், இதுபோல பெண்கள் திருமணத்திற்கு முன் பெண் தன்மையுடன் இருந்து திருமணத்திற்கு பின் ஆண்தன்மை பெற்று செயற்படுவதைக் காண்கின்றோம். அவ்வாறு செயல்கள் நடைபெறுவதற்கு காரணம் சிவன்சக்திக்கு இடதுபாகம் தந்தோம் என்னும் வாக்கியப்படி ஒவ்வொரு ஆணின் உடலிலும் இடது பாகம் பெண் தன்மை கொண்டும் வலது பாகம் ஆண்தன்மையுடனும் அமைந்து செயற்படுகின்றன. இதுபோல் ஒவ்வொரு பெண்ணின் உடலிலும் வலதுபக்கம் பெண்தன்மையுடனும் இடது பக்கம் ஆண்தன்மையுடனும் அமைந்து செயற்படுகின்றன. அவ்வாறு செயற்படுவதினால் தான் ஆண் - பெண் இருவரும் பிரம்மநிலை அடைகின்றனர். மேற்கண்ட இவைகள் அனைத்தும் முறையாக அமைந்து மனிதகுலம் சிறப்புடன் வாழும் வகையில் நம் உடல் அனைத்தும் பிரம்மத்தில் இருந்து வந்தது என்பதினால்தான் ஆண் - பெண் இருவரும் பஞ்சகீர்த்திய கர்மாலை செய்து மீண்டும் பிரம்மநிலையை அடையும் பொருட்டு வழிபாடும் செய்யும் வகையில் ஸ்ரீ பரப்பிரம்ம உருவத்தையும் அருஉருவமாக ஸ்ரீ சக்ரம், ஸ்ரீ அர்த்தமேரு, ஸ்ரீ மகாமேரு, ஸ்ரீ பிரம்மலிங்க உருவத்தையும், உருவமாக நம் (மனிதர்கள்) உருவத்தையும் வகுத்து வழிபட்டனர் நம்முன்னோர்கள். அதன்படி நம் உடம்பின் தத்துவமே ஸ்ரீ மகாமேரு உருவமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீ மகாமேரு சக்ரம் பூஜை செய்வதினால் ஏற்படும் பலன்கள்.**

1. இறை நெறியை அறிந்து கொண்டு அதன்படி நடக்க உதவி செய்கின்றன.

2. ஆண், பெண் இருவரும் பிரம்மத்தை அறிந்து கொள்ள உதவி செய்கின்றன.

3. மனதை ஒரு நிலைப்படுத்த உதவி செய்கின்றன.

4. உலக இயக்கத்தின் தத்துவத்தை அறிந்து கொள்ள உதவி செய்கின்றன.

5. பெரியோர்களை மதித்து நடக்க உதவி செய்கின்றன.

6. ஐந்து தொழில்களில் ஈடுபட்டு சிறப்புடன் வாழ உதவி செய்கின்றன.

7. விட்டுக்கொடுத்து கூடி வாழ்வதற்கு உதவி செய்கின்றன.

8. ஆண்கள் ஐந்து வித பெண்களை அறிந்து கொள்ள உதவி செய்கின்றன.

9. பெண்கள் ஐந்து வித ஆண்களை அறிந்து கொள்ள உதவி செய்கின்றன.

10. பிள்ளைகளை ஐந்துவித நெறிகளோடு வாழவைக்க உதவி செய்கின்றன.

11. முதுமையில் சந்தேகம் இல்லாமல் வாழ உதவி செய்கின்றன.

12. காலங்களுக்கு ஏற்ற நீதியை வழங்க உதவி செய்கின்றன.

13. நிம்மதி என்னும் ஆத்ம திருப்தி ஏற்படஉதவி செய்கின்றன.

தொகுப்பு:- தம்பிராசா ஈஸ்வரராஜா

(மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி)

செயற்குழு உறுப்பினர்

ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலய சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகத்தின் போது அன்பளிப்பு வழங்கியவர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| சு. அருளானந்தம். | (2307, 2309) | 10,000. 00 |
| இ. கிருஷ்ணமூர்த்தி. | (2313) | 10,000. 00 |
| ந. ஜீவகுமார். | (2310) | 10,000. 00 |
| பா. குமரகுருபரன். | (2308) | 5,000. 00 |
| பூ. லோகானந்ததாஷன் | (2314, 2043) | 10,000. 00 |
| ஏ. பாக்கியமூர்த்தி | (2303) | 10,000. 00 |
| வே. நந்தகுமார். | (2235, 2051) | 10,000. 00 |
| ஞா. இராமநாதன் | (2210) | 5,000. 00 |
| ஈ. லவராஜ் | (2267) | 5,000. 00 |
| த. கருணாகரன். | (2017, 2322) | 5,000. 00 |
| க. சத்தியானந்தன். | (2264) | 5,000. 00 |
| ப. யோகநாதன். | (2025) | 10,000. 00 |
| K. சிவலிங்கம். | (2236, 2347) | 5,000. 00 |
| அ. அம்பிகைபாகன் | (2009) | 3,000. 00 |
| ஞா. லோகநாதன் | (2248) | 5,000. 00 |
| R. ஜெயரெட்ணம். | (2323) | 5,000. 00 |
| K. சண்முகலிங்கம் | (2213) | 3,000. 00 |
| M. பரந்தாமன். | 2253, 2207) | 3,000. 00 |
| இ. இராமமூர்த்தி. | (2258, 2016) | 5,000. 00 |
| செ. மேகரட்ணம். | (2003, 2332, 2205) | 10,000. 00 |
| திருமதி. ஈ. தம்பிராஜா | (2364, 2305) | 5,000. 00 |
| த. விஜீயாகரன். | (2018) | 5,000. 00 |
| சி. செல்வலிங்கம். | (2316) | 3,000. 00 |
| S. புண்ணியமூர்த்தி. | (2204, 2241) | 5,000. 00 |
| த. ஜெயச்சந்திரன் 200/= | (2229, 2031) | 5,200. 00 |
| சி மகேந்திரன். | (2230) | 3,000. 00 |
| த. சண்முகராஜா. | (2247, 2271) | 7,000. 00 |
| K. கோவிந்தசாமி. | (2315) | 5,000. 00 |
| M. ஈஸ்வரன். | (2284) | 5,000. 00 |
| பா. துசாந்தன். | (2362) | 5,000. 00 |
| ம. அருட்சோதி. | (2324, 2397) | 2,000. 00 |
| கா. சிவயோகதாஷன். | (2372) | 50,000. 00 |
| இ. லோகநாதன். | (2373) | 5,000. 00 |
| கி. சிறிக்குமார். | (2317) | 5,000. 00 |
| T. சண்முகராஜா. | (2320) | 5,000. 00 |
| இ. நமசிவாயம். | (2318) | 3,000. 00 |
| S. சதீஸ்குமார். | (2333,2233) | 5,000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| S. சின்னத்துரை. | (2290) | 5,000. 00 |
| வீ. தனசேகரம். | (2242) | 5,000. 00 |
| உ. கோபாலப்பிள்ளை | (2363) | 5,000. 00 |
| அ. விஸ்வரெட்ணம். | (2279, 2381) | 5,000. 00 |
| க. நிமலகரன். | (2011) | 5,000. 00 |
| திருமதி. வள்ளி சிறீஸ்காந்தன் | (2325) | 15,000. 00 |
| திரு. திருமதி. சிவலிங்கம். | (2251) | 5,000. 00 |
| K. ஈஸ்பரநாதன். | (2326) | 5,000. 00 |
| S. இழஞ்சேழியன் | (2327) | 5,000. 00 |
| கா. தட்சனாமூர்த்தி. | (2342) | 6,000. 00 |
| திருமதி. வி. சிவராஜா. | (2032, 2328, 2041) | 5,000. 00 |
| ஞா. கருணாகரன். | (2340, 2354, 2367) | 5,000. 00 |
| சி. சற்குருநாதன். | (2228) | 5,000. 00 |
| A. S. இரத்தினராஜா. | (2288, 2206) | 5,000. 00 |
| பா. தேவானந்தம் | (2224) | 6,000. 00 |
| S. மகாலிங்கம். | (2329) | 5,000. 00 |
| N. நவரெட்ணராஜா | (2361) | 5,000. 00 |
| T. சாந்தலிங்கம். | (2330, 2380) | 5,000. 00 |
| S. சரவணபவான். | (2331) | 5,000. 00 |
| ஞா. தர்மநாதன். | (2395) | 5,000. 00 |
| சி. தகபரன். | (2343) | 5,000. 00 |
| த. புண்ணியமூர்த்தி. | (2385) | 5,000. 00 |
| இ. சுந்தரமூர்த்தி. | (2010, 2036) | 5,000. 00 |
| பூ. நித்தியானந்ததாஷன். | (2341, 2349, 2059) | 5,000. 00 |
| சி. சிவலிங்கம். | (2289) | 2,500. 00 |
| வே. சிறிதயானந்தா. | (2373) | 5,000. 00 |
| C. V. விஸ்வலிங்கம். | (2338, 2259) | 5,000. 00 |
| V. இந்திரகுமாரன். | (2281) | 5,000. 00 |
| த. ஈஸ்வரராஜா. | (2321, 2061) | 5,000. 00 |
| சி. ராஜகுலேந்திரன். | (2339, 2004) | 8,000. 00 |
| ந. ஞாணச்சந்திரன். | (2350, 2004, 2378) | 40,000. 00 |
| நா. நந்தகுமார். | (2233) | 5,000. 00 |
| பூ. கிருபாணந்ததாஷன். | (2217) | 5,000. 00 |
| சி. விக்னேஸ்வரன் | (2348, 2263) | 5,000. 00 |
| திரு. பழனியப்பா | (2394) | 5,000. 00 |
| N. தயானந்தன் | (2351) | 5,000. 00 |
| வே. கிருஷ்ணப்பிள்ளை | (2370) | 5,000. 00 |
| S. தவராசா | (2298) | 5,000. 00 |
| சி. ரஞ்சன் | (2352) | 3,000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| K. சத்தியநாதன் | (2221, 2028) | 5,500. 00 |
| கே. கமலேஸ்வரன் | (2356) | 2,000. 00 |
| S. அரசரெட்ணம் | (2371) | 3,000. 00 |
| சி. சண்முகநாதன் | (2396) | 3,000. 00 |
| யோ. கமலேஸ்வரன் | (2353) | 25,000. 00 |
| திருமதி. த. மகாலெட்சுமி | (2019) | 5,000. 00 |
| V. சங்கரப்பிள்ளை | (2357) | 5,000. 00 |
| R. சுரேஷ்குமார் | (2358) | 1,000. 00 |
| செ. குரு | (2359) | 5,000. 00 |
| ந. பிரபாகரன் | (2360, 2234) | 5,000. 00 |
| சி. அழகுராசா | (2282) | 5,000. 00 |
| இரா. தேவநாதன் | (2013) | 5,000. 00 |
| S. நடராசா | (2369) | 5,000. 00 |
| சு. சண்முகராஜா | (2355) | 10,000. 00 |
| N. விஸ்வநாதன் | (2278) | 3,000. 00 |
| க. சந்தானம் | (2365) | 5,000. 00 |
| இரா. நித்தியானந்தன் | (2366), 2057, 2052) | 5,000. 00 |
| ந. சிறிகரன் | (2368) (பத்மாசலி) | 5,000. 00 |
| சி. தயாபரன் | (2380) | 20,000. 00 |
| சிவானந்தம் | (2002) | 5,000. 00 |
| தியாகராஜா | (2382) | 5,000. 00 |
| திருமதி. ப. பூபாலப்பிள்ளை | (2377, 2060) | 5,000. 00 |
| திருமதி. ஆ. நடராசா | 2383) | 5,000. 00 |
| நிரங்கன் அமுதா | (2384) | 2,000. 00 |
| பூ. ஏகாம்பரதாஷன் | (2285, 2212) | 3,000. 00 |
| S. செல்வராஜா | (2386) | 5,000. 00 |
| சிவகௌரி மகேந்திரன் | (2387) | 10,000. 00 |
| இ.யோகராணி | (2288) | 1,000. 00 |
| கணபதி கஜேந்திரன் | (2389) | 1,000. 00 |
| சி. மகேந்திரன் | (2390) | 4,625. 00 |
| சி. ஜெயந்திரன் | (2391) | 9,250. 00 |
| சி.லோகேந்திரன் | (2391) | 9,250. 00 |
| திருமதி. சீனிவாசகம் | (2393) | 4,625. 00 |
| செ. திவாஸ்கர் | (2215) | 1,000. 00 |
| செ. தங்கவடிவேல் | (2291) | 5,000. 00 |
| சி. நடராசா | (2202) | 5,000. 00 |
| திருமதி. இ. சிவஞானசுந்தரம் | (2400) | 25,000. 00 |
| க. வினாயகமூர்த்தி | (2201) | 5,000. 00 |
| க. காஸிராஜா | (2203) | 3,000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| த. கந்தலிங்கம் | (2210) | 5,000. 00 |
| பா. வரதராஜன் | (2211) | 2,000. 00 |
| தங்கவடிவேல் | (2316) | 25,000. 00 |
| சீத்தா பாஸ்கரன் | (2218) | 10,000. 00 |
| தங்கலெட்சுமி யோகேந்திரன் | (2219) | 5,000. 00 |
| செல்வி யோ. நிவேதித்தா | (2220) | 1,000. 00 |
| திரு.ஜெகன்நாதன் | (2222) | 3,000. 00 |
| திரு. ஜெயந்திரன் | (2223) | 5,000. 00 |
| S. சந்திரகாந்தன் | (2225) | 2,500. 00 |
| வீ. சிறிவத்சன் | (2226) | 5,000. 00 |
| விசாலாட்சி | (2246) | 3,000. 00 |
| வபதாரணி | (2245) | 1,000. 00 |
| சிவகரேஸ் | (2244) | 1,000. 00 |
| அழகையா உதயவதனி | (2243) | 2,000. 00 |
| ம. கௌரி சங்கர் | (2238) | 1,000. 00 |
| பா. சுதர்சன் | (2237) | 5,000. 00 |
| கரிகரன் | (2248) | 10,000. 00 |
| கருணாநிதி | (2250) | 5,000. 00 |
| வாமதேவன் ஐயா | (2252) | 500. 00 |
| ப. மயூரன் | (2256) | 500. 00 |
| ப. காயத்திரி | (2255) | 500. 00 |
| ப. லோகவர்த்தனி | (2254) | 500. 00 |
| திரு. தம்பிப்பிள்ளை | (2227) | 2,000. 00 |
| க. கிருபானந்தன் | (2265, 2283) | 50,000. 00 |
| நரேந்திரன் | (2262) | 1,000. 00 |
| திருமதி. ந. விஜீயராணி | (2261) | 5,000. 00 |
| T. பாக்கியராசா | (2260) | 1,500. 00 |
| K. தபேரன் | (2257) | 500. 00 |
| சண்முகராசா | (2273) | 3,000. 00 |
| சி. பூபாலப்பிள்ளை | (2266) | 10,000. 00 |
| T. தயாபரன் | (2268) | 10,000. 00 |
| பூ. தயானந்ததாஷன் | (2270), 2040, 2042) | 100,000. 00 |
| S. சந்திரசேகரம் | (2274) | 1,500. 00 |
| V. சூரியபிரதாப் | (2275) | 5,000. 00 |
| கா. பஞ்சாட்சரம் | (2276) | 500. 00 |
| முருகையா | (2344, 2277) | 5,000. 00 |
| ந. திவாகரன் | (2280) | 5,000. 00 |
| திருநாவுக்கரசு | (2286) | 2,000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சண்முகராஜா | (2287) | 500. 00 |
| பிரகலநாதன் | (2292) | 500. 00 |
| ந. சிறிகரன் | (2293) | 2,000. 00 |
| ஜெகநாதன் | (2294) | 5,000. 00 |
| குணசேகரம் | (2297) | 3,000. 00 |
| சுகுமார் | (2299) | 2,000. 00 |
| விவேகானந்தன் | (2300) | 5,000. 00 |
| ந. சிவராசா | (2001) | 25,000. 00 |
| பா. கோபாலன் | (2005) | 1,000. 00 |
| பா. பிரவின் | (2006) | 1,000. 00 |
| அ. ரவிச்சந்திரன் | (2007) | 1,000. 00 |
| K.S. ராஜேந்திரம் | (2008) | 5,000. 00 |
| சௌமியமூர்த்தி | (2012) | 3,000. 00 |
| பாலசுப்பிரமணியம் | (2014) | 10,000. 00 |
| நா. பத்மநாதன் | (2015) | 3,000. 00 |
| ஜெயபாலன் | (2020) | 10,000. 00 |
| சு. சுதானந்தன் | (2021) | 5,000. 00 |
| குமாரசாமி | (2022) | 2,000. 00 |
| திருமதி. சர்வானந்தா | (2023) | 5,000. 00 |
| திருமதி. இராஜரெட்ணம் | (2026) | 1,000. 00 |
| குருகுலசிங்கம் | (2027) | 500. 00 |
| அன்னம்மா | (2030) | 60. 00 |
| திருமதி. அ. சிதம்பரநாதன் | (2208) | 1,000. 00 |
| வே. இரத்தினராசா | (2304) | 1,001. 00 |
| திருமதி. த. இரத்தினகோபால் | (2272) | 1,000. 00 |
| திருமதி. ஸ்ரீ பத்மசாமி | (2306) | 2,000. 00 |
| சற்குருநாதன் | (2311) | 2,000. 00 |
| ஐயா | (2312) | 500. 00 |
| விசாலாட்சி | (2319) | 2,000. 00 |
| தங்கத்துரை | (2334, 2049) | 6,000. 00 |
| R. கோபிகாதிலகம் | (2335) | 1,000. 00 |
| R. வரலெட்சுமி | (2336) | 1,000. 00 |
| சோ. ராமச்சந்திரன் | (2337) | 500. 00 |
| ம. விஜீகரன் | (2345) | 2,000. 00 |
| சசிகலாதேவி | (2346) | 300. 00 |
| டுஜீத்ரா | (2375) | 1,000. 00 |
| மகேந்திரன் | (2398) | 1,300. 00 |
| சி. கமலானந்தம் | (2209) | 1,000. 00 |
| S. சண்முகநாதன் | (2214) | 500. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அருணாச்சலம் | (2231) | 500. 00 |
| ந. சரச்சந்திரன் | (2033) | 15,000. 00 |
| செ. சண்முகானந்தன் | (2035) | 3,000. 00 |
| சொ. சாமிவேல் | (2044) | 5,000. 00 |
| N. குணசேகரம் | (2045) | 1,000. 00 |
| வ. கோபாலப்பிள்ளை | (2046) | 2,000. 00 |
| திருமதி. பாஸ்கரன் | (2047) | 500. 00 |
| T. ஜெயகரன் | (2048) | 5,000. 00 |
| சி. திருஞானசம்பந்தம் | (2050) | 10,000. 00 |
| ரவிச்சந்திரன் | (2054) | 2,000. 00 |
| சி. கோகுலன் | (2053) | 5,000. 00 |
| மா. ரங்கநாதன் | (2055) | 50,000. 00 |
| மகேஸ்வரி குழந்தவேல் | (2056) | 10,000. 00 |
| திருமறன் மகாலிங்கம் | (2038) | 5,000. 00 |
| S. மோகன் | (2037) | 5,000. 00 |
| வே. ரவிந்திரராஜா | (2034, 2058) | 5,000. 00 |
| ச. திருநாவுகரசு | (2062) | 5,000. 00 |
| A. வண்ணமணி | (2063) | 2,000. 00 |
| நல்லெண்ணை விற்பனை | 2064 | 8,000. 00 |
| பிரதீப் குழுவினர் (தவில்) | (2065) | 10,000. 00 |

**1008 சங்கு - தம்பிராஜா கருணாகரன் (ரவி) சியாமளா ஜுவலரி**

**தரைக்கு மாபிள் பதித்தது:**
**ஸ்ரீ பத்மநாதசாமி குடும்பம்**
**சாந்தரூபன் றோகினி**
**செல்வன் இ. பிரசாத்**

**நீர்த்தாங்கி வேலைகள்:**
திரு.திருமதி. **நகுலேஸ்வரி சச்சிதானந்தம் (ஜெர்மனி)**
**திரு. திருமதி. பாண்டியன்**
**திரு. திருமதி. மகேஸ்வரன்**

**முகப்பு அம்மன் சிலை செய்தது**
**சிவசுப்பிரமணியம் தேவராணி**

**நீர்த்தாங்கி:** திரு.**திருமதி. ஷாமினி பிரியதர்ஷினி**

**கொடி மரக் கலச திருத்தவேலைக்கான செலவு**
**நல்லரெத்தினம் குடும்பத்தின் சார்பாக**
**திருமதி. இராசலெச்சுமியால் வழங்கப்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எந்தவொரு நல்ல காரியத்தையும் மனப்பூர்வமாகவும், இறை சிந்தனையுடனும் செய்ய எத்தனிப்பின் அது செவ்வனே நிறைவேறுவது இயல்பு. இது போன்றதுதான் எமது கும்பாபிஷேக நிகழ்வும். யாரும் எதிர்பார்க்காத தருணத்தில் மிகவும் குறுகிய காலத்திற்குள் எமது ஆலயத்தின் கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு எம்மனைவருக்கும் உந்துசக்தியாக எம்முன்னே இருந்து எம்மை வழிநடத்திய அன்னை மகாமாரிக்கு எனது சிரம் தாழ்த்தி பலகோடி வணக்கங்களையும் நன்றிகளையும் முதலில் தெரிவித்துக்கொண்டு,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

எனும் பொய்யாமொழிப்புலவன் வள்ளுவன் வாக்கிற்கேற்ப பின்வருவோருக்கு நாம், "வார்த்தையும் உளதோ வழங்கிட நன்றி" என்று கூற கடமைப்பட்டுள்ளோம்.

இம்மலரைச் சிறப்பிக்க ஆசிச்செய்திகளை வழங்கிய கல்லடி உப்போடை இராமகிருஷ்ணமிஷன் சுவாமி அஜராத்மானந்தா அவர்களுக்கும்

- ஆலய புனராவர்த்தன மகாகும்பாபிஷேகத்தை சிறப்பாக நடாத்திய பிரதிஷ்டா பிரதம குருக்கள் கிரியாகிரம வித்தியாஜோதி, குமரகுருமணி ப்ரம்மஸ்ரீ முத்து சற்குருநாதக்குருக்கள் அவர்கட்கும், இப்புண்ணிய கைங்கரியத்தில் பங்கு கொண்ட அனைத்து சிவாச்சாரியார்களுக்கும் உதவிக்குருக்கள்மாருக்கும்,
- கும்பாபிஷேகம் தொடக்கம் மண்டலாபிஷேகம் வரையான காலங்களில் சிறப்பாக மங்கள வாத்திய இசையை வழங்கிய மு. பிரதீப் குழுவினருக்கும்,
- ஆலய கோபுரங்களுக்கும் கட்டிடங்களுக்கும் புதுப்பொலிவூட்டிய ஓவியர் வல்லிபுரம் நாகராஜா (சந்திரன்) குழுவினருக்கும்
- காலத்தினால் செய்த உதவி சிறிது எனினும் ஞாலத்தின் மானப்பெரிது என்பதுபோல எமது பணத்தேவையை அறிந்து நாம் கேட்டும், கேட்காமலும் எம்மை நாடிவந்து பணஉதவி பொருளுதவி செய்த அன்பர்களுக்கும்,
- மேலும் இப்புண்ணிய கைங்கரியம் மிகவும் சிறப்புற நடைபெறவேண்டும் எனும் பேரவாவில், வெளிநாட்டில் இருந்தாலும்கூட தம்மால் இயன்ற நிதியுதவிகளை வாரி வழங்கிய எமது ஆலய சமூக உறுப்பினர்களுக்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எமது ஆலயத்தில் இடம்பெற்ற சிறுசிறு திருத்தவேலைகளை பங்கெடுத்துச் செய்த அன்பர்களுக்கும்,

- ஆலய சங்கத்திற்கு உறுதுணையாகவும், ஊன்றுகோலாகவும் அனைத்து செயற்பாடுகளிலும் இரவு பகல் பாராது பங்குகொண்ட விஸ்வகுல வாலிபர் சங்கத்தினருக்கும் அவர்களுக்கு உறுதுணையாக நின்ற மாதர் சங்கத்தினருக்கும், ஏனையோருக்கும்,

- மேலும் அம்பிகையின் பணியே தன்பணியாகக் கொண்டு ஆலய நிர்வாகத்தை திறம்பட அமைத்து நிர்வாகிக்கும் ஆலய பரிபாலன சபையாரது ஆக்கமும் ஊக்கமும் எமது லட்சியத்தை நிறைவேறச் செய்து பெருமைப்படுத்தியது என்பதற்காக ஆலய பரிபாலன சபையாருக்கும் கும்பாபிஷேக குழுவினர்க்கும்

- நாற்பத்தி எட்டு நாட்கள் இடம்பெற்ற மண்டாலாபிஷேகப் பூசையினை எடுத்து சிறப்பாக நடாத்தியபூசை உபயகாரர்களுக்கும்,

- இம்மலர் அழகுற மலர்ந்து மணம் கமழ நிதியுதவி, ஏனைய உதவிகளை நல்கிய வியாபார, அன்பர்களுக்கும்,

- அன்னை மகாமாரியின் கும்பாபிஷேக விழாவின் ஞாபகார்த்தமாகவும் ஆலய சங்க பவள விழா ஞாபகார்த்தமாகவும் மலரும் இச்சிறப்பு மலரை அன்னையின் திருவடிகளில் பயபக்தியோடு சமர்ப்பணம் செய்யக் கிடைத்த பெரும்பேற்றை நினைத்து "அவளருளாலே அவள்தாள் வணங்கி" நிற்கின்றோம். "சீரும் திருவும் பொலியச்" சிறந்து விளங்கும் இம்மலருக்கு தலைமையுரையையும், கட்டுரைகளையும் வழங்கிய சான்றோர்களுக்கும், மலர்க்குழுவினர்களுக்கும், ஆலோசக உறுப்பினர்களுக்கும், மலர் அமைப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்து அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும், படப்பிடிப்பாளருக்கும் பணிவன்போடு நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்.

- மேலும்! இக்கைங்கரியத்தில் எல்லோருடனும் என்னையும் இணைத்து செயற்படவைத்த அன்னையின் பொற்பாதங்களுக்கு மீண்டும் எனது நன்றியை சமர்ப்பிப்பதோடு தவறுதலாக நன்றி கூற மறந்த அனைவருக்கும் மீண்டும் மீண்டும் நன்றிகூறி விடைபெறுகின்றேன்.

- நன்றி -

வணக்கம்.



**பூ லோகானந்ததாசன்**
(தற்காலிக செயலாளர், ஸ்ரீ மகாமாரியம்மன் ஆலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org